RE/MAX Realtron Blue Force
Team Blue Force
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
Direct 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 13 ஜனவரி 2023 இதழ்:- 38

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

# கோட்டா - மகிந்தா சகோதரர்கள் உட்பட 4 பேர் கனடாவுக்குள் நுழையத் தடை!



இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான குற்றச் சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்ற நிலையில், ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினர் மீது சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றது. (3ம் பக்கம்)

# ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா 10 கோடி ரூபா வழங்க உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித்ஜயசுந்தர, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ் ஆகியோர் 2019 ஆம் ஆண்டு உளவுத்துறை தகவல் பெற்றுக்கொண்டு, உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இதனூடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் (4ம் பக்கம் பார்க்க)

# தனி வழி செல்லும் தமிழரசுக்கட்சி! பெரும் திண்டாட்டத்தில் ரெலோ - புளொட்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. கூட்டமைப்பின் ஏனைய (7ம் பக்கம் பார்க்க)

Ilankai Tamil Arasu Kadchi

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் விழா இசைச் சங்கமம் 2023 விபரங்கள் அடுத்த வாரம்

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
Mortgage Alliance

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

WISHING YOU AND YOUR FAMILY A JOYFUL
## Holiday Season and a Prosperous year 2023

**Thank you** to all of my clients, family, and friends for trusting me with your Real Estate needs during the last 20 years.

*I hope to continue working with you in the future.*

**Mississauga /Sandalwood**


**Brampton** $677,000
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen

**Dixie & Clark**


**Brampton** $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded

**Sheppard & Warden**


**Scarborough** $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony

**Mccowan/Hwy 401**

**Scarborough** $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl

**Eglinton & Mccowan**



**Scarborough** $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!


**Birchmount & Enterprise**

**Markham** $699,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen

**Sandalwood Pkwy/Hurontario**


**Brampton** $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Location Location

**Simco St N/ Darcy**

**Oshawa** $998,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Renovated Home

**Williams Pkwy/James Potter**

**Brampton** $1,699,900
Bedrooms: 4+2 Washrooms: 4
Upgraded Large Kitchen

**Markham & Major Mackenzie**

**Markham** $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space

**Salem / Taunton**


**Ajax** $1,189,800
Bedrooms: 4+1 Washrooms: 4
Location Location Location!

**Don Mills/Eglinton**


**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கோட்டா - மகிந்தா சகோதரர்கள் உட்பட 4 பேர் கனடாவுக்குள் நுழையத் தடை!



இலங்கையில் இடம் பெற்றதாக கூறப் படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான குற்றச் சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருகின்ற நிலையில், ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினர் மீது சர்வதேச சமூகம் குற்றச்சாட்டுக்களை தொடர்ந் தும் முன்வைத்து வருகின்றது.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி களும், சகோதரர்களுமான மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் கோட்டாபய உள்ளிட்ட நால்வருக்கு தமது நாட்டிற்குள் பிரவே சிக்க கனடா தடை விதித்துள்ளது.

கனடா அரசாங்கத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் இந்த விடயத்தை கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மேலதிகமாக பணியாளர் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன் கமான்டர் சந்தன பிரசாத் ஹெட்டிஆராய்ச்சி ஆகியோருக்கும் கனடா அரசாங்கம் தடை விதித்து ள்ளது.

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலம் வரை இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் திட்டமிட்டு, மனித உரிமை மீறிமீறப்பட்டதால், இந்த தடை விதிக்க ப்பட்டுள்ளதாக கனடா நாட்டு அரசாங்க த்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நபர்களுக்கு கனடாவில் காணப் படும் அனைத்து சொத்துக்களும் தடை செய்யப்படுவதுடன், குறித்த நபர்களு க்கு எந்தவொரு விதத்திலும் தமது நாட்டிற்குள் பிரவேசிக்க முடியாது எனவும் அந்த நாட்டு அரசாங்கம் கூறி யுள்ளது. குறித்த நபர்கள் தமது சொத்துக்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ அல்லது நிதி வழங்குவதையோ கனடா மற்றும் கனடாவிற்கு வெளியிலுள்ள கனேடியர்களுக்கு தடை செய்யப்பட்டுள் ளது.

கடந்த நான்கு தசாப்த ஆயுத போரினால், பொருளாதாரம், அரசியல் ஸ்திரமற்ற நிலைமை மற்றும் மனித உரிமை பாரியளவில் மீறப்பட்டமை காரணமாக, இலங்கை மக்கள் பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளதாக கனடா வெளிவிவ கார அமைச்சர் மெலனி ஜோலி தெரி வித்துள்ளார்.

இலங்கையில் சமாதானம், நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய வற்றை அடைவதில் கனடா உறுதியாக உள்ளது. சர்வதேச சட்டத்தை மீறுவோ ருக்கு எதிராக சர்வதேச தண்டனை களை வழங்க கனடா இன்று தீர்மான மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு ள்ளது. பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத் துவதன் மூலம் சமாதானமான செழிப் பான இலங்கைக்கு ஆதரவளிக்க கனடா தயாராக உள்ளது.' என கனடா வெளி விவகார அமைச்சர் கூறியுள்ளார். இதன்படி, 2023–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6–ஆம் தேதி முதல் இந்த நட வடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் லட்சக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாகவும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்ததாக வும் தமிழர் தரப்பினர் கூறி வருகின்ற னர். அத்துடன், ஆயிரக்கணக்கான தமிழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டதாக கூறி, வடக்கில் இன்றும் தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், தமக்கான நீதியை உள்நாட்டில் எதிர்பார்க்க முடியாது எனவும், சர்வதேச நாடுகள் தமக்கான நீதியை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் வடக்கு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில், கனடா இந்த அறிவிப்பை விடுத்துள் ளது.



## இலங்கை அதிருப்தி

இதேவேளை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகி யோருக்கு எதிராக கனடா அரசாங்கம் தடைகளை விதித்தமை தொடர்பில் இலங்கை தனது அதிருப்தியை வெளி யிட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வால்ஷ் ஆகியோருக்கு இடையில் 11 ஜனவரி 2023 புதன் கிழமை இடம 'பெற்ற சந்திப்பின் போதே இலங்கையின் அதிரு ப்தியை அமைச்சர் அலி சப்ரி வெளிப் படுத்தியுள்ளார். மனித உரிமை மீறல் களை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக கடந்த செவ்வாய்கிழமை கனேடிய அரசாங்கத் தினால் பல்வேறு முக்கிய தடைகள் விதிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே புதன்கிழமை தினம் கனேடிய உயர்ஸ்தானிகரை ,வெளிநாட்ட லுவல்கள் அமைச்சிற்கு வரவழைத்து அமைச்சர் இலங்கையின் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் முன்னாள் ஜனாதி பதிகள் இருவர் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தமை இந்த முக்கிய மான தருணத்தில் பொறுப்பற்ற செயலா கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, நல்லிணக்கத்தை அடை வதற்காக ஆழமான பொருளாதார மற் றும் அரசியல் சீர்திருத்தங்களில் நாடு ஈடுபட்டுள்ள வேளையிலேயே இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் இந்த நடவடிக்கையானது தற்போதைய சந்தர்ப்பத்தில் உதவியற்ற தும் ,இலங்கையிலுள்ள சமூகத்தினரை ஓரங்கட்டுவதைப் போன்ற செயற்பாடு மாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டு ள்ளார்.




## ஹரி வரவேற்பு!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ச முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச உட்பட நால்வருக்கு எதிரான தடை, சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல் களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவார்கள் என்பதற்கான தெளி வான அறிகுறி என கனடா நாடாளு மன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது

வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவின் ஒரு பகுதியாக, இலங்கையில் தமிழ் மக்க ளுக்கு எதிரான மொத்த மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதற்காக, மஹிந்த மற்றும் கோட்டாபய ராஜபக்ச மீது கனடா சிறப்பு பொருளாதார நடவடிக் கைகள் சட்டத்தின் கீழ் தடைகளை விதித்துள்ளதாக(22ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா 10 கோடி ரூபா வழங்க உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித்ஜய சுந்தர, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ் ஆகியோர் 2019 ஆம் ஆண்டு உளவுத்துறை தகவல் பெற்றுக்கொண்டு, உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இதனூடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஏப்ரல் 21 தாக்குதல்களில், 269 பேர் கொல்லப்பட்டதுடன், 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட உள்ளதாக, போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதனைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளாதமை மூலம், அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக குற்றம் சுமத்தி 12 மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கத்தோலிக்க அருட் தந்தையர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்கள் மீதான தீர்ப்பை 12 ஜனவரி 2023 வியாழக்கிழமைஉயர்நீதிமன்றம் அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஏழுவர் கொண்ட நீதியரசர்கள் ஆயத்தால் இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. இதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன,



முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன, முன்னாள் காவல்துறைமா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் அடிப்படை மனித உரிமையை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதற்குப் பொறுப்புடையவர்கள் என்ற அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவை இழப்பீடாக செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன, 75 மில்லியன் ரூபாவையும்,

முன்னாள் காவல்துறைமா அதிபர் பூஜித் ஜயசுந்தர, 75 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, 50 மில்லியன் ரூபாவையும், முன்னாள் குற்றப் புலனாய்வுத் துறையின் தலைவர் சிசிர மெண்டிஸ், 10 மில்லியன் ரூபாவையும் இழப்பீடாக செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கம், குறித்த இழப்பீட்டுத் தொகையை அறவிட்டு, குண்டுத் தாக்குதல்களில் இறந்தவர்களுக்காக, தலா ஒரு மில்லியன் ரூபா வீதம், அவர்




களின் உறவுகளுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், காயமடைந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபா வழங்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர், நிலந்த ஜயவர்தனவுக்கு, 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“இசைச் சங்கமம் 2023”






ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

கனடா முத்துமாரியம்மன்

அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

14 ஜனவரி 2023 சனிக்கிழமை பகல்:- தைப்பொங்கல்

விஷேட பூஜை காலை 10.00 மணிக்கு நடைபெறும் .

உபயம்: பொன். சிவா சந்தானலஷ்மி குடும்பம்.

14 ஜனவரி 2023 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு

ஐயப்பன் மகரஜோதி தரிசனம் நடைபெறும்

உபயம்: மதிவண்ணன் மகாலிங்கம் குடும்பம் .

21ஜனவரி 2023 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு

அபிராமி பட்டர் விழா

உபயம்: இராஜ. முகுந்தன் சதுர்ஜன்

24 ஜனவரி 2023 செவ்வாய்கிழமை (11வது வருடம்)

காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம்.

24 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு

திருவுஞ்சல் மணவாள கோலம்.

உபயம்: வெ. சதானந்தவடிவேல் குடும்பம் .

சி. லிங்கராஜா குடும்பம் .

சா. முரளி குடும்பம் .

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். அனைவரும் வருக! அம்பாள் அருள் பெறுக!

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# விடுமுறையைக் கழிக்க உலகிலேயே சிறந்த நாடு இலங்கை என்கிறது லண்டன் இணையத்தளம்

ஐக்கிய இராச்சியத்தின் மைநேறள இணையத்தளம் அதிகப் பணம் செலவழிக்காமல் பெப்ரவரி விடுமுறையைக் கழிக்க உலகிலேயே சிறந்த நாடு இலங்கை என்று தெரிவித்துள்ளது.

இவ்வருடம் விடுமுறை எடுத்துக் கொண்டு வேறு நாட்டிற்குச் சென்று விடுமுறை எடுக்கக் காத்திருக்கும் சுற்றுலாப் பயணிகளுக்காக அதிகப் பணம் செலவழிக்காமல் நல்ல சேவையைப் பெறக்கூடிய 12 நாடுகளின் பெயர்களை ஐ நியூஸ் இணையதளம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் 75வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியிருப்பதால் நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளதாக அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், பெப்ரவரியில் விமான டிக்கெட்டுகளின் விலை குறைந்த அளவிலேயே இருப்பதாகவும், கடந்த ஆண்டு ஏப்ரலில் 145 ரூபாயாக இருந்த



ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்று தற்போது 441 ரூபாயாக மாறியுள்ளதாகவும் ஐ நியூஸ் இணையதளம் குறிப்பிட்டுள்ளது. இதன் விளைவாக இலங்கையின் மலைப் பிரதேசத்திற்கு 15 நாள் பயணத்திற்கு ஒரு நபருக்கு 1845 பவுண்டுகள் செலவாகும் என iNews இணையத் தளம் தெரிவித்துள்ளது.

# காணி விடுவிப்புக்கு இராணுவம் தயாரில்லை?



காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் பணிப்புரைகளைச் செயல்படுத்துவதற்கு இராணுவத் தரப்பு தயக்கம் காட்டி வருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய செயல் குழுக் கூட்டம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் 08 ஜனசரி 2023 நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம் பெறும் பேச்சு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறும் விடயங்களை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தப் பின்னடிக்கின்றார்கள். குறிப்பாகக் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கும் பணிப்புரைகளைச் செயல்படுத்துவதற்கு இராணுவத் தரப்பு தயக்கம் காட்டி வருகின்றது. இராணுவத்தினர் தங்களது நிலைப்பாடுகளிலிருந்து விட்டுக் கொடுக்கின்றார்கள் இல்லை. எனினும், அரசியல்கைதிகள் விடுதலை விடயத்தில் சாதகமான நிலைப்பாடுகள் உள்ளன என்றார்.

# கூட்டமைப்பில் புதிய கட்சிகளை உள் வாங்குவோம்! தேவையேற்படின் பொதுச் சின்னம் ரெலோ அறிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் புதிய கட்சிகளை உள்வாங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஒரு கட்சியால் எடுக்கப்படும் தீர்மானங்கள் எந்த விதத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்புக்கு பிரச்சனையை ஏற்படுத்தாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

08 ஜனவரி 2023 திங்கட்கிழமை அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கின்ற ஒரு கட்சியினர் சில தீர்மானங்களை எடுத்துள்ளனர். அவ்வாறான தீர்மானங்களிலும் மாறுபட்ட நிலைப்பாடுகள் உள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது பல கட்சிகளை உள்வாங்கி பயணித்து வந்த ஓர் அமைப்பு.காலத்தின் கோலத்தினால் பலர் அதிலிருந்து வெளியேறிய சூழல் காணப்படுகின்றது. இன்னும் பலரையும் நாங்கள் இணைக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. ஆகவே இந்த முயற்சியைத் தொடர்ந்து மற்ற அங்கத்துவ கட்சிகளும் இப்போது ஒருமித்த நிலைப்பாட்டிலே செயலாற்றி கொண்டிருப்பவர்களை நாங்கள் சரியான முறையிலே ஒருங்கமைத்து ஒரு கட்டமைப்பாக பலப்படுத்த வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம்.

தனிப்பட்ட ரீதியிலே கட்சிகளின் கூட்டங்களிலே எடுக்கப்படுகின்ற முடிவுகள் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அல்லது தமிழர் தரப்பை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற முயற்சிக்கு பங்கம் ஏற்படுத்தாது என்பது எங்களுடைய நிலைப்பாடு இதேபோன்று



தேர்தல்களிலே எப்படி முகம் கொடுப்பது என்பதை பற்றி ஒரு கட்சியின் கூட்டத்திலே பேசப்பட்டதாக, நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். அதிலும் சில மாறுபட்ட கருத்துக்களையே நாங்கள் அறிகின்றோம். ஆகவே சரியான தீர்வு என்ன? என்பதை அங்கத்துவ கட்சிகளோடு கலந்துரையாடி முடிவுக்கு வருவதாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டம் நடைபெற்ற பின்னர் தான், தேர்தல்கள் எப்படி எதிர்கொள்ளப்படும் என்பதை எங்களுக்கு உறுதியாக சொல்ல முடியும் என்றார்.

இதனிடையே செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய சின்னத்தில் போட்டியிடுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்பட்டால் பொதுசின்னம் ஒன்று தெரிவு செய்யப்படும். பல உயிர்தியாகங்களின் பின்னர் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை குறுகிய நோக்கங்களுக்காக இல்லாமல் செய்வதற்கு ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

# பரிகசிக்கப்படும் தமிழ் சிவில் சமூகம்?

பேச்சை கட்சிகள் எவ்வாறு கையாள வேண்டுமென்று சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துபவர்கள் அல்லது தங்களை குடிசார் சமூகமென்று வெளிக்காட்டி வருபவர்கள் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அதே போன்று கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டுமென்றும் சிவில் சமூக குழுக்கள் கோரி வருகின்றன. இப்போதும்கூட, அரசு சாரா நிறுவனங்களின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளிலும் கட்சிகளின் ஒன்றிணைவு வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறான செயல்பாடுகளுக்கு மத்தியில் தான் இலங்கை தமிழரசு கட்சியானது உள்ளூராட்சித் தேர்தலை தனித்து எதிர் கொள்வதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. இதன் பொருள் என்ன?

2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, ஐந்து கட்சிகளின் கூட்டான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய அரசியலை பொறுப்பேற்றது. 2010இல், கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீடு விவகாரத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக (ஏனைய கட்சிகளின் பார்வையில்) கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. கொள்கை முரண்பாட்டின் காரணமாக வெளியேறியதாகவே பொன்னம்பலம் அணி கூறி வருகின்றது. பின்னர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) வெளியேறியது. கூட்டமைப்பின் கட்டமைப்பிலுள்ள சிக்கல்களை காரணம் காட்டியே ஈ. பி. ஆர். எல். எவ். வெளியேறியது.

பின்னர், கூட்டமைப்பால் முதலமைச்சராக்கப்பட்ட சி. வி. விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்கு எதிராகக் கட்சியொன்றை உருவாக்கினார். இந்த இடைப்பட்ட காலத்திலும் அதற்கு பின்னரும், தமிழ் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், மதத்தலைவர்களென்று பலரும் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோரை ஒன்றிணைத்து புதிய கூட்டணியொன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம் பெற்றன. அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

பின்னர் விக்னேஸ்வரன் தலைமையில் கூட்டமைப்புக்கு வெளியிலிருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைத்து, மாற்று தமிழ் தேசிய அணியொன்றை கட்டியெழுப்பும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இதேபோன்று, தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் (பேரவை என்பது கட்சிகளையும் உள்ளடக்கியது) மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை. அனைத்து முயற்சிகளின் போதும் சிவில் சமூகத்தின் கருத்துகள் கருத்தில் கொள்ளப்படவில்லை. அவர்களின் உழைப்பு பரிகசிக்கப்பட்டது. ஆனாலும் கூட, வேதாளம் முருங்கை மரத்தில் போல் கட்சிகள் செயல்பட்ட போதும் கூட, மீண்டும் மீண்டும் விக்கிரமாதித்தியன்கள் போன்று சிவில் சமூக குழுக்களும் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், ஒருபோதுமே சிவில் சமூகத்தின் கருத்துகள், கரிசனைகள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், பலரும் ஓரணியாக நில்லுங்கள் என்று, சிவில் சமூகம் கூறி வருகின்ற நிலையில், தமிழரசு கட்சியானது தேர்தலை தனியாக எதிர்கொள்ளவுள்ளதாக அறிவித்திருக்கின்றது. ஒரு கட்சிக்கு தேர்தலை தனித்து எதிர்கொள்வதா அல்லது இணைந்து எதிர்கொள்வதா என்று முடிவெடுக்கும் உரிமையுள்ளது. ஆனால் இங்கு, ஒன்றாக நில்லுங்கள் என்று கூறிவருபவர்களின் கருத்துகளுக்கு வழங்கப்படும் மதிப்பு என்ன?

சிவில் சமூகங்களாகத் தங்களை முன்னிறுத்துபவர்கள் தேர்தல் அரசியல் சிக்கல்களை விளங்கிக் கொள்ளாமல் கற்பனை செய்கின்றனரா அல்லது அவர்கள் தங்களை பலமான நிலையில் அணிதிரட்டிக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனரா?

சிவில் சமூக அமைப்புக்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக இருக்கும் வரையில், இவ்வாறான பரிகசிப்புகள் தொடரும். ஏனெனில், சிவில் சமூகமாக தங்களை முன்னிறுத்துபவர்கள் எவருமே அரசியல் கட்சிகளின் இருப்பை கேள்விக்கு உள்ளாக்க முடியாதவர்கள். இதன் காரணமாகவே, அவர்களின் குரல்களுக்கு தமிழ்த் தேசிய கட்சிகள் செவிசாய்ப்பதில்லை.

சிவில் சமூக அமைப்புக்கள், இப்போதிருக்கின்ற நிலையிலேயே இருக்குமாயின், இனியும் இவ்வாறு தான் நடக்கும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023
“இசைச் சங்கமம் 2023”
தொடர்புகளுக்கு 416 841 9600

# கடன் நிவாரணம் குறித்த கடும் நிலைப்பாட்டினால் இலங்கைக்கான முக்கிய உதவிகள் தடுக்கப்பட்டுள்ளது



உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஹெட்ஜ் நிதிகளும் ஏனைய முதலீட்டாளர்களும் தங்களுடைய கடும் நிலைப்பாட்டின் காரணமாக நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கைக்கான முக்கிய உதவியை தடுத்து வைத்துள்ளனர் என உலகின் 182 பொருளாதார நிபுணர்களும் அபிவிருத்தி நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

கடன் நிவாரணம் குறித்த தங்களின் கடும் நிலைப்பாடு காரணமாக உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஹெட்ஜ்நிதிகளும் ஏனைய முதலீட்டாளர்களும் இலங்கைக்கான முக்கிய உதவி கிடைப்பதை தடுத்துள்ளனர் என என உலகின் 182 பொருளாதார நிபுணர்களும் அபிவிருத்தி நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

கார்டியனிற்கு வழங்கியுள்ள அறிக்கையில் அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர். இலங்கையின் பொருளாதார மீட்சி பெறுவதற்கு விரிவான கடன் இரத்து அவசியம் என தெரிவித்துள்ள அவர்கள் சர்வதேச அளவில் உருவாகி வரும் கடன் நெருக்கடியை கையாள்வதற்கு சர்வதேச சமூகம் தயாரா என்பதற்கு இலங்கை ஒரு பரிசோதனை களமாக காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைக்கு மிக முக்கியமான நிதி கிடைப்பதை முதலீட்டு நிறுவனங்கள் போன்ற தனியார் துறை கடன் வழங்குநர்களும் ஹெட்ஜ் நிதிகளும் தடுத்துள்ளனர் எனவும் உலகின் 182 பொருளாதார நிபுணர்களும் அபிவிருத்தி நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் கடன் பேச்சுவார்த்தைகள் தற்போது மிக முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன, என அறிக்கையில் தெரிவித்துள்ள அவர்கள் இருதரப்பு பல் தரப்பு தனியார் கடன்வழங்குநர்கள் அனைவரும் கடன் மறுசீரமைப்பின் சுமையை சுமக்கவேண்டும் குறுகிய காலத்தில் மேலதிக நிதி கிடைக்க வேண்டும் என்ற உத்தரவாதத்தை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு 3 மில்லியன் (ஏறத்தாழ 817 மில்லியன் இலங்கை ரூபாய்) டொலர்களை கனடா வழங்குகிறது என்று இலங்கையிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் (IFRC) மனிதாபிமான முறையீடுகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த உதவி வழங்கப்படுகிறது.

அவசரகால உணவு உதவி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து சேவைகள், பாதுகாப்பான நீர் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை மிகவும் தேவைப்படுபவர்களுக்கு வழங்குவதற்கு ஆதரவளிப்பதற்கு, ஐ.நா மற்றும் ஐகுசுஊ மூலம் அவர்களின் உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து இந்த பங்களிப்பு வழங்கப்படும். மேலும்,இலங்கையின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும், அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்தல் உட்பட இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதற்கும் தொடர்ந்து சர்வதேச உதவித் திட்டங்களை கனடா முன்னெடுத்துள்ளது.

இந்த இக்கட்டான காலங்களில் அனைத்து இலங்கையர்களுடனும் கனடா தொடர்ந்து நிற்கிறது மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான இலங்கையை ஆதரிப்பதில் உறுதியாக உள்ளது என்று உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சித் தேர்தலில் மணியுடன் இணைந்து போட்டியிட விக்கி தீர்மானம்!



நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோருக்கு இடையில், சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இச் சந்திப்பு திங்கட்கிழமை 09 ஜனவரி 2023 பிற்பகல், யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இடம் பெற்றது. இதன் போது எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில், சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியில் போட்டியிடுவது தொடர்பில் ஆராயப்பட்டது. (22ம் பக்கம் பார்க்க)


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# உள்ளூராட்சித் தேர்தலில் தனி வழி செல்லும் தமிழரசுக்கட்சி! பெரும் திண்டாட்டத்தில் ரெலோ - புளொட் அமைப்புக்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன, தொடர்ந்தும் சேர்ந்து போட்டியிடுவதா அல்லது தாமும் தனித்தனியாகவே போட்டியிடுவதா என்பது குறித்து அந்தந்தக் கட்சிகள் தமக்குள் பேசித் தீர்மானம் எடுப்பர் என்றும் முடிவாகியுள்ளது. கொழும்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் 09 ஜனவரி 2023 காலை இடம்பெற்ற கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளின் கலந்துரையாடலின் போதே தமிழரசுக் கட்சி தனது இந்தத் தீர்மானத்தினை அறிவித்தது. இந்த கலந்துரையாடலில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் சார்பில் தலைவர் மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், ஹென்றி மகேந்திரன், புளொட் சார்பில் நல்லநாதர் ராகவன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். உடல் நலமின்மை காரணமாக தர்மலிங்கம் சித்தார்த்தன் இந்த கலந்துரையாடலில் பங்கேற்க முடியவில்லை.

இதன்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகள் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பரந்து பட்ட கூட்டமைப்பாகப் போட்டியிடுவதா என்பன தொடர்பில் பேசப்பட்டது.

கடந்த தேர்தலை எதிர்கொண்டதைப் போல எதிர்கொள்ளலாம் என ரெலோ முன்மொழிந்துள்ளது. எனினும், கடந்த முறை தமக்கு உறுதியளிக்கப்பட்ட சபைகள் தேர்தல் வெற்றியின் பின்னர் வழங்கப்படாததால், அது பற்றி மீளப் பேசப்பட வேண்டும் என புளொட் தெரிவித்துள்ளது. எனினும், தேர்தல் நெருங்கி விட்டதால், அதைப் பற்றி பேச அவகாசமில்லையென தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இறுதியில் எவ்வாறாயினும் தாம் தனித்தே போட்டியிடப் போவதாகத் தமிழரசு கட்சி தீர்மானம் எடுத்துத் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியன, தொடர்ந்தும் தாம் சேர்ந்து போட்டியிடுவதா அல்லது தாமும் தனித்தனியாகவே போட்டியிடுவதா என்பது குறித்து தமக்குள் பேசித் தீர்மானம் எடுப்பர் என்றும்முடிவாகியுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற பெயரைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவரும் போட்டியிடுவதில்லை என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக தமிழரசு கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவ்வாறான எந்த விடயமும் பேசப்படவே இல்லை என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். 2001 ஆம் (22ம் பக்கம் பார்க்க).

# கனடிய அரசு இலங்கை அதிகாரிகள் மீது பிறப்பித்துள்ள இலக்கு வைக்கப்பட்டுள்ள தடையை வரவேற்கும் CTC



ஜனவரி 10, 2022, சிறப்புப் பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் (SEMA) கீழ் மனித உரிமை மீறல்களுக்காகப் இலங்கை அரசில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்த நான்கு இலங்கையர்கள் மீது கனடிய அரசு இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதித்துள்ளது. SEMA சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க, லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகிய நால்வரும் கனடாவில் சொத்துகளை வைத்திருக்கும் பட்சத்தில் அவற்றைக் கனடிய அரசு முடக்கும். மேலும் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கனடாவிற்குள் அவர்களை உள்நுழைய அனுமதிக்க முடியாது.

அத்துடன் கனடிய அரசினால் தடைக்கு உள்ளாக்கப்பட்ட இந்த நான்கு பேருடனும் கனடியர்கள் கனடா நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் எந்தச் சொத்து சார்ந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது. மேலும் கனடியர்கள் அவர்களுக்கு எவ்வித நிதியுதவிகளும் செய்ய முடியாது.

இலங்கையில் போர் முடிவடைந்து 13 ஆண்டுகளுக்குப் பின்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இலங்கையின் மீது எழுந்த நிலையில், இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல், கனடியத் தமிழர் பேரவையானது இலங்கை இராணுவக் கட்டளைத் தலைமைகளுக்கு எதிரான தடைகளை விதிக்குமாறு பலமுறை கனடிய அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன், 2020 பெப்ரவரி 14 ஆம் திகதி இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்ததிலிருந்து அதற்கான வேண்டுகோளைக் கடுமையாகக் கோரி வந்திருக்கின்றது.

2019ஆம் ஆண்டிலிருந்து பதவி வகித்து வந்த எல்லா வெளிவிவகார அமைச்சர்களுக்கும், கனடியத் தமிழர் பேரவை இலங்கை அரசு மீது இவ்வாறான நடவடிக்கைகளை எடுக்குமாறு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்துள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொண்ட கனடிய மாண்புமிகு வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி அவர்களைக் கனடியத் தமிழர் பேரவை பாராட்டுகிறது என கனடியத் தமிழர் பேரவை. தெரிவித்துள்ளது.

# தனிநபர்களைத் தடை செய்வது மாத்திரம் போதாது!



தனிநபர்களை தடை செய்வது மாத்திரம் போதாது குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தும் சர்வதேச பொறிமுறை அவசியம் என இலங்கையின் நீதி மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பின் ஆலோசகர் மரியோ அருள்தாஸ் தெரிவித்துள்ளார். தடை ராஜபக்ச சகோதரர்கள் மீது ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தை குறைத்து மதிப்பிட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அமெரிக்க கனடா இங்கிலாந்து போன்ற நாடுகளிடமிருந்து பல வருடங்களாக அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளது இலங்கை தான் தொடர்ச்சியாக வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறி விட்டது, எனவும் மரியோ அருள்தாஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு பின்னர் கனடா தடைகளை அறிவித்துள்ளமை தமிழ் மக்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் இலங்கையை துரத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தனிநபர்களை தடை செய்வது மாத்திரம் போதாது குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தும் சர்வதேச பொறிமுறை அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரணில் தலைமையிலான அரசுக்கு ஒரு வார காலக்கெடுவை வழங்கியது தமிழ்த்தரப்பு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு ஒருவாரகால கலக்கெடுவை தமிழ்த் தரப்பு வழங்கியுள்ளதோடு, அக்காலப்பகுதிக்குள் அரசால் நடைமுறைச்சாத்தியமாக்ககூடிய விடயங்கள் அடங்கிய பட்டியலை முன் வைக்குமாறும் கோரியுள்ளது. அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்கு இன்றிலிருந்து தொடர்ச்சியாக நான்கு நாட்கள் பேசுவதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டிந்த போதும், அரசாங்கத்தின் சாதகமான சமிக்ஞையின் பின்னரே அடுத்தகட்டப் பேச்சு தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றும் தமிழ்த் தரப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும் தமிழ்த் தரப்பிற்கும் இடையிலான தேசிய இனப்பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை தொடர்பில் பேசுவதற்கான தொடர்ச்சியான நான்கு நாள் பேச்சுவார்த்தையின் முதலாம் நாள் பேச்சுக்கள் நடைபெற்றிருந்தன. இதில் அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, விஜயதாச ராஜபக்ஷ, அலிசப்ரி, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர். பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து கொண்டிருக்கவில்லை. அதேநேரம், தமிழ்த்தரப்பில் சம்பந்தன், மாவை.சேனாதிராஜா, சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். சித்தார்த்தன் சுகவீனம் காரண மாக பங்கேற்கவில்லை என்பதோடு, சி.வி. விக்னேஸ்வரனும் கலந்து கொண்டிருக்கவில்லை. தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தொடர்ச்சியாக நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை முதல்நாளுடன் நிறைவுக்கு வந்துள்ளது. அரசாங்கம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தினால் தொடர்ச்சியாகப் பேசுவோம் என்றனர்.

# இலங்கை வாழ் தமிழர்களுக்காக இந்தியா துணை நிற்க வேண்டும்! இந்திய A.N.I செய்திச் சேவைக்கு சுமந்திரன் தெரிவிப்பு!

அரசியலமைப்பு ரீதியிலான தீர்வு திட்டத்தை நோக்கிய அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடன் கலந்துக் கொள்கிறோம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறைந்தது அந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதுடன், இதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பினையும் கோருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சென்னை வர்த்தக மையத்தில் இடம் பெற்ற 9ஆம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், விடுதலை சிறுத்தை கட்சி தலைவர் தொல்.திருமாவளவனுடன் இடம் பெற்ற சந்திப்பின் பின்னர் ஏ.என்.ஐ. செய்தி சேவைக்கு கருத்து வெளியிடும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை வாழ் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு திட்டத்தில் அந்த மக்களின் சார்பாக இந்தியாவே முன்னின்று செயற்பட்டது. எனவே அரசியலமைப்பு ரீதியிலான தீர்வு திட்ட விடயத்தில் இலங்கை தமிழர்களைப் பொறுத்த வரையில் இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதொன்றாகும்.

தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம் பெற்ற கலந்துரையாடலில் பங்கு பற்றினேன்.

பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னரான ஒரு கால வரையறைக்குள் தீர்வு திட்டத்தை அடைவதற்கான அரசுடனான பேச்சுவார்த்தைகளில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கலந்து கொண்டு வருகின்றோம். முழுமையான அதிகாரப் பகிர்வு நோக்கிய தீர்வு திட்டத்தில் எமது முழுமையான ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு வழங்குவோம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதுவே பெரும் சிக்கலாகும். எனவே தான் குறைந்தது அந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களையேனும் முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதுடன், இதற்காக இந்தியாவின் ஒத்துழைப்பினையும் கோருகின்றோம்.

அதே போன்று கால தாமதமின்றி மாகாண சபைத் தேர்தலை நடத்தவும், எந்தவொரு தேர்தலையும் ஒத்தி வைக்கக் கூடாது என்றும் அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு விரோதமானதாகும். எனவே இலங்கை வாழ் தமிழர்களுக்காக இந்தியா துணை நிற்க வேண்டும் என்றார்.

இதேவேளை. ஜனாதிபதியுடனான சந்திப்பில் முன்னேற்றமில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரன் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பானது இன்று கொக்குவிலில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது. அங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

சென்னையிலே மலையக முன்னணியின் ஏற்பாட்டில் தொல் திருமாவளவன் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் பங்களிப்புடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மலையக முன்னணியின் தலைவர் இராதகிருஸ்ணன் பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்நிலையில் இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரிய பத்திரிகையாளர் சந்திப்பாக அது காணப்பட்டது. அவர்கள் அனைவரும் அந்த சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது 13ம் திருத்தச்சட்டம் தமிழ்மக்களுக்குரிய தீர்வு அல்ல என வலியுறுத்தினர். எம்மைப் பொறுத்தவரை சுமந்திரனின் இக் கருத்து ஆச்சரியமல்ல. சுமந்திரன் திட்டமிட்டு தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டவர். ஆனால் திருமாவளவன் மகேந்திரன் போன்றவர்கள் ஈழப்போராட்டத்தின் போது ஈழத் தமிழர்களுக்காக உறுதியாக குரல் கொடுத்தவர்கள். போராட்ட காலத்திற்கு முன்னர் இவர்கள் இருவரின் வாயால் கூட 13ம் திருத்தச்சட்டமும் மாகாண சபை முறைமையும் தீர்வு என்று உச்சரித்ததை நான் அறியவில்லை.

அந்தவகையில் அவர்கள் இந்த 13ம் திருத்தச்சட்டத்தை மத்திய அரசை கோரும் கருத்தானது. எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கின்றது. மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் சந்திரசேகரன் ஐயா ஈழப் போராட்டத்தை மிகவும் நேசித்தவர். அவர்களின் கட்சியினரும் தனித்துவமாக ஈழத்தமிழர்களுக்காக செயற்பட்டவர். அப்படிப்பட்ட கட்சியில் இருந்து வந்த இராதாகிருஸ்ணன் 13ம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தும் செயற்பாடானது வெறுப்புக் குரியது என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



## இது நம்ம யாழ்ப்பாணம் 13

# தமிழில் விக்கிபீடியாவும் யாழ்ப்பாணத்து மயூரநாதனும்

யாழ்நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

விக்கிபீடியா என்ற சொல் என்று அனைவராலும் உச்சரிக்கப்படும் ஒரு சொல்லாகி விட்டது. ஆங்கிலத்தில் மட்டுமே ஒரு கலைக் களஞ்சியமாக விக்கிபீடியா பயன் படுத்தப்பட்டு வந்த நிலையில் தமிழ் மக்களும் இதனைப் பயன்படுத்தும் வகையில் தமிழ் மொழியில் விக்கிப்பீடியாவை அமைத்தவர் ஒரு யாழ்ப்பாணத்தவர் என்பது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் ஒரு விடயம். இதற்காக இந்தியாவின் புகழ்பெற்ற ஊடக நிறுவனமான ஆனந்த விகடன் அவருக்கு விருது வழங்கி கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது.

வளர்ச்சியடைந்த ஒரு மொழிக்கும் தனது இருப்பைத் தக்க வைக்கக் கலைக்களஞ்சியம் என்பது இன்றியமையாதது. அவ்வகையில் தமிழுக்காகப் பெரியசாமித் தூரன் தலைமையில் 1954இல் வெளிவந்த 'தமிழ்க் கலைக் களஞ்சியம்' ஒரு மாபெரும் படைப்பாகும். அதன் பின்னர் அவ்வப்போது சில துறை சார்ந்த களஞ்சியங்கள் வெளிவந்திருந்தாலும் பெயர் சொல்லும் வகையில் அவை இல்லை.

உலக மொழிகள் அனைத்துக்கும் அந்தந்த மொழியினரே கலைக் களஞ்சியங்களை உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பை விக்கிப்பீடியா ஏற்படுத்தித் தருகிறது. இதை நிர்வகிப்பது யார்?



அரசா அமைப்பா என்றால் இரண்டும் இல்லை. காரணம் உலகின் எந்த மொழியையும் அரசோ அமைப்போ உருவாக்குவதில்லை. மக்களே மக்களுக்காக உருவாக்கிக் கொள்ளும் மக்கள் கலைக்களஞ்சியம் விக்கிப்பீடியாவாகும். இதனால் எந்த அரசுக்கோ அமைப்புக்கோ சார்பு நிலையிலோ கட்டுப்பட்ட நிலையிலோ இது இருப்பதில்லை. உள்ளதை உள்ளபடி எழுதிக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது விக்கிப்பீடியா.

தற்போதைக்கு உலக அளவில் 318 மொழிகளில் விக்கிப்பீடியா உருவாக்கப்பட்டுள்ளது. 'அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் எனும் பாரதியார் வாக்கின்படி இணையத்தில் அந்தந்த மொழியினரின் முழுத் தன்னார்வ அறிவுப்பகிர்வின் அடிப்படையில் இவை உருவாக்கப்படுகின்றன. அரசியல் சண்டை ரசிகர் சண்டை வகுப்புவாதச் சண்டையிட்டு முட்டிக் கொள்ளும் இணையவாசிகளிடையே ஆக்கபூர்வமாகத் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்துவோரும் உள்ளனர் என்பதற்குத் தமிழ் விக்கிப்பீடியாவே சான்று.

ஆம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் தமிழ்க் கட்டுரைகளைக் கடந்து புதிய மைல் கல்லைத் தமிழ் விக்கிப்பீடியா இப்போது எட்டியுள்ளது. இவற்றையெல்லாம் தொகுத்து அச்சு நூலாக உருவாக்கவும் அதை மேம்படுத்தவும் சாத்தியமில்லாத நிலையில் தான் தமிழின் தற்போதைய மாபெரும் கலைக்களஞ்சியமான தமிழ் விக்கிப்பீடியா உள்ளது. கட்டுரைகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்திய மொழிகளுள் மூன்றாவது இடத்திலும் உலக மொழிகளுள் அறுபத்து ஒன்றாம் இடத்திலும் தமிழ் விக்கிப்பீடியா உள்ளது.

இந்தியாவில் பரவலாகப் பேசப்படும் இந்தி மொழியில் 1.54 லட்சம் கட்டுரைகள் இருக்கும் போது தமிழ் மொழியில் 1.5 லட்சம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மொத்தமாகத் தமிழ் விக்கிப்பீடியாவில் 4.12 கோடி சொற்கள் உள்ளன. சுமார் 400 தொடர் பங்களிப்பாளர்கள் உழைத்திருக்கின்றனர். சுமார் 36 லட்சம் முறை தமிழ் விக்கிப்பீடியா திருத்தப்பட்டுள்ளது. இப்போதும் திருத்தப்பட்டு வருகின்றது. தமிழிலும் பொதுவான விடயங்களிலும் ஆாவம் உள்ள யாரும் இதற்கான பங்களிப்பை வழங்க முடியும்.

விக்கிப்பீடியா என்னும் தளத்தை 2001இல் ஜிம்மி வேல்ஸும் லாரி சாங்கரும் இணைந்து உருவாக்கினார்கள். தமிழ் விக்கிப்பீடியா பக்கம் யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த இ.மயூரநாதன் என்பவரால் உருவாக்கப்பட்டு அவர் உட்படப் பலரால் வளர்த்தெடுக்கப்பட்டு இரண்டாண்டுகளில் ஆயிரம் கட்டுரைகளை அடைந்தது. 2017 மே 8 அன்று ஒரு லட்சம் கட்டுரைகளாக விரிவடைந்து இன்று 1.5 லட்சம் கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

இதில் வரலாறுஇ கலை அறிவியல் பொது அறிவு என இல்லாத துறைகளே இல்லை எனலாம். தமிழகத்தின் பல கல்லூரிகளில் நடைபெற்ற விக்கிப்பீடியா பயிற்சி வகுப்புகளால் விக்கிப்பீடியா அதன் துணைத் திட்டங்களில் கணிசமான மாணவர்கள் பங்களிக்கத் தொடங்கியுள்ளார்கள். இங்குள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் கூடுதலாக ஒவ்வொரு செய்தியைச் சேர்த்து மேம்படுத்தும் பல ஆசிரியர்களும் உள்ளனர். எந்தவொரு பிழையையும் சுட்டிக் காட்டித் திருத்திக் கொள்ளும் வசதியை இத்தளம் கொண்டுள்ளதால் உயிரோட்டமான ஒரு கலைக்களஞ்சியமாக இது உள்ளது.

யாழ்ப்பாணத்திலும் விக்கிப்பீடியா குறித்த அறிவையும் ஆர்வத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் அடுத்த வாரம் அது குறித்த செயலமர்வு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழில் விக்கிப்பீடியாவை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கிய மயூராதன் இதில் கலந்து கொள்கின்றார். அதன் மூலம் யாழ்ப்பாணத்தவர்கள் விக்கிபீடியாவுக்கு வழங்கும் பங்களிப்பை மேலும் அதிகரிக்கக்கூடியதாக இருக்கும். இந்தப் பகுதியில் மற்றொரு வாரத்தில் மயூரநாதனின் நேர்காணல் ஒன்றையும் வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இணையத்துக்கென்றே இருக்கக்கூடிய தன்மையான பல்லூடக வடிவு தேடல் வசதிஇ வகைப்பாடு ஆகியவற்றைத் தாண்டி யாரும் எழுதக்கூடிய வகையில் இருப்பதே விப்பிபிடியாவின் சிறப்பு. அதற்காக விக்கிப்பீடியாவில் யார் வேண்டுமென்றாலும் எழுதலாம் அவர்களில் நிபுணர்கள் என எவருமில்லை என்கிற கூற்று மேம்போக்கானது. அனைவராலும் வளர்த்தெடுக்கக் கூடிய தன்மையைத் தான் கொண்டுள்ளதே அன்றி தான்தோன்றித் தனமானதல்ல விக்கிப்பீடியா. விரிவான கொள்கைகளையும் வழி காட்டல்களையும்



கொண்டு மேற்கோள்கள் ஆதாரங்கள் அடிப்படையில் ஒவ்வொரு நொடியும் பிழைகள் களையப்பட்டு குறிப்பிடத்தக்க தன்மையற்ற கட்டுரைகள் நீக்கப்பட்டே வருகின்றன. முறையான உரையாடல்களும் நீண்ட மீளாய்வுகளும் இதன் தரத்தை மேம்படுத்த நடைபெற்று வருகின்றன. அவதூறுகளும் தாக்குதல்களும் நடைபெறாமல் இருக்க உலக அளவில் கண்காணிப்புக் குழுவும் உள்ளது.

நூறு நிபுணர்களால் உருவாக்கக்கூடிய ஒரு கலைக்களஞ்சியம் சென்றடையக் கூடிய கரங்களை விட முகமறியா இணையவாசிகளால் உருவாகும் இக் களஞ்சியம் சென்றடையக் கூடிய கரங்கள் நிச்சயம் பல மடங்காகும். மேலும் நிபுணர்களால் உருவாக்கப்படும் 'தமிழ்.விக்கி' உட்பட பல களஞ்சியங்களும் இந்த விக்கிப்பீடியப் படைப்புகளைப் பெரிதும் பயன்படுத்துகின்றன என்பது தன்னார்வலர்களுக்குக் கிடைத்த வெற்றிஆகும்.

2010இல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தமிழ் விக்கிப்பீடியாவுக்கெனத் தனிப் போட்டிகள் நடத்தப்பட்டு இக்கூட்டுழைப்பைத் தமிழ்ச் சமூகம் அங்கீகரித்தது. 2016இல் தமிழக அரசின் சில துறைகளின் தரவுகள் பொது வுரிமையில் அளிக்கப்பட்டு அவை விக்கிப்பீடியாவில் கட்டுரைகளாகவும் ஆக்கப்பட்டன.

2019ஆம் ஆண்டு கூகுள் உதவியுடன் இந்திய அளவில் நடந்த வேங்கைத் திட்டக் கட்டுரைப் போட்டியில் கூட்டுழைப்பாகத் தமிழ் விக்கிப்பீடியா வெற்றி பெற்றுப் பெருமை சேர்த்தது. இப்போது தமிழ் விக்கிப்பீடியாவில் 1.5 லட்சம் கட்டுரைகள் நிறைந்து இரண்டு லட்சம் கட்டுரைகளை நோக்கி அடியெடுத்து வைத்துள்ள நகர்வு என்பது 20 ஆண்டு கால முயற்சி மட்டுமல்ல 2இ000 ஆண்டு கால இலக்கியத் தொடர்ச்சியுமாகும். விக்கிபீடியாவில் சில தகவல் குறைபாடுகளும் இருக்கலாம். ஆனால்இ ஆர்வம் உள்ள எவரும் அவற்றைத் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. அதற்கு முன்னர் அது தொடர்பாகவும் அதில் எவ்வாறு தகவல்களை உள்ளிட முடியும் என்பதையும் கற்றுக் கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

எவ் வாறிருந்த போதிலும் தமிழில் இவ்வாறான மாபெரும் கலைக்களஞ்சியம் உருவாக்குவதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் பாரிய பங்களிப்பை வழங்கியிருப்பது முக்கியமானதாகும். அதே போல இதனை மேலும் வளர்த்தெடுப்பதிலும் எம்மவர்கள் பயனுறுதியுள்ள பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கும்.



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய். தந்தை. உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள். பிள்ளைகளின் பிறந்தநாள். திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.


07 ஜனவரி 2023 முதல் 13 ஜனவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 10 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 45வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 45வது ஆண்டு நினைவு நாள் 09 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா செல்லத்துரை

கட்டுவன் மேற்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்டிருந்த திரு தம்பையா செல்லத்துரை அவர்களின் 29வது ஆண்டு நினைவு நாள் 07 ஜனவரி 2023 சனிக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பையா செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 04 ஜனவரி 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 11 ஜனவரி 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு சுப்பர் பொன்னுத்துரை

### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



07 ஜனவரி 2023 சனிக்கிழமை கட்டுவன் மேற்கைச் சேர்ந்த திரு தம்பையா செல்லத்துரை அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புவிபாலன் பானுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வி வைஷ்ணவியின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி வைஷ்ணவி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி தர்மினி ரஜீவனின் 40வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி தர்மினி ரஜீவன் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். திருமதி தர்மினி ரஜீவன் அவர்கள் ஆரோக்கியம் ஐஸ்வர்யம் நிறைந்து பல்லாண்டு வாழ அனைவரும் வாழ்த்துகின்றோம்.



09 ஜனவரி 2023 திங்கட்கிழமை ஊரெழு கிழக்கைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 45வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 ஜனவரி 2023 புதன்கிழமை மயிலிட்டியைச் சேர்ந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 ஜனவரி 2023 வெள்ளிக்கிழமை நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சிராப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான திரு கந்தையா திருமதி கண்மணி இணையர்களது நினைவாக அவரது மகன் திரு லிங்கேஸ்வரன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.




# தமிழக ஆளுநரின் செயல்பாடுகள் தமிழக பா.ஜ.கவுக்கு பலனளிக்குமா?

## ஆளுநரின் நடவடிக்கைகளை கண்டிக்கிறார் இந்து பத்திரிகை குழும ராம்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின் சில பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி தவிர்த்து விட்டு வாசித்ததும், அதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்த தீர்மானமும் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆளுநரின் செயல்பாடுகள், அவரது நோக்கம், மாநில அரசியலில் ஆளுநரின் செயல் ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவை குறித்து தி இந்து குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவரான என். ராம், பிபிசி தமிழின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் பேசினார். அவர் பேசியதிலிருந்து:

**கேள்வி:** திங்கட்கிழமை தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையை வாசித்த ஆர்.என். ரவி, அதில் சில பகுதிகளை விட்டுவிட்டு வாசித்தது சர்ச்சையாகியிருக்கிறது. இது மரபு மீறலா?

**பதில்:** இந்த ஆளுநரின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறேன். மிகவும் அத்துமீறி, அரசியல் சாஸனத்திற்கு எதிராகச் செயல்படுகிறார். ஆளுநர் இப்படிச் செயல்பட அதிகாரம் கிடையாது. இவர் ஏதேதோ பேசுகிறார். அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ்நாடு என இருக்கிறது. ஆனால், இவர் தமிழ்நாடு என இருக்க வேண்டாம், தமிழகம் என இருக்கலாம் என்கிறார். திங்கட்கிழமை மிக மோசமாக நடந்து கொண்டி ஶ்ரீருக்கிறார். அவர் திரும்பப்பெறப்பட வேண்டும்.



எதைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது எனத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கு இல்லை. அமைச்சரவை முடிவுசெய்து எதைக் கொடுக்கிறதோ, அதைத்தான் படிக்க வேண்டும். அவர்கள் கண்ணியமாகத்தான் எழுதியிருக்கிறார்கள். அவர் அதைத்தான் படிக்க வேண்டும். அவர் சில விஷயங்களைப் படித்துவிட்டு, சிலவற்றை விட முடியாது. இவர் மிக மோசமாக நடந்து கொண்டிருக்கிறார். அவர் மட்டுமல்ல, பல ஆளுநர்கள் இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். குறிப்பாக கேரள ஆளுநர் போன்றவர்கள்.

ஆர்.என். ரவி இங்கிருக்க தகுதியில்லாதவர். அவர் ஒரு காவல்துறை அதிகாரி. அவருக்கு இங்கிருக்கும் கலாசாரம், அரசியல், மொழி போன்றவை புரியவில்லை. தினமும் ஏதோ செய்கிறார். கடந்த காலத்திலும் ஆளுநர்கள் பல தருணங்களில் தவறாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் பதவியே இதுபோல ஆகிவிட்டது. தில்லியிலிருந்து உத்தரவு வருகிறதா அல்லது இவரே செய்கிறாரா என்று தெரியவில்லை. ஆனால், இவர் செய்யும் விஷயங்கள் விசித்திரமாக இருக்கின்றன. இவர் திரும்பப்பெற வேண்டும்.

**கேள்வி:** ஆளுநர்கள், ஆளுநர் உரையில் தங்களுக்குப் பிடிக்காத சித்தாந்தம் குறித்துவரும்போது, அதைத் தவிர்த்துவிட்டு வாசிக்க முடியுமா?

**பதில்:** முடியாது. இவருக்குப் பிடித்ததைத்தான் படிப்பேன், பிடிக்காததைப் படிக்க மாட்டேன் எனச் சொல்ல முடியாது. ஆளுநர் என்பவர் அரசியல் சாஸன ரீதியாக மாநிலத்தின் தலைவர். அவ்வளவுதான். அவருடைய அதிகாரங்கள் மிகக் குறைவு. அரசியல்சாஸனத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. பல உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும் இது தொடர்பாக இருக்கின்றன. ஆகவே நான், எனக்குப் பிடித்ததைத்தான் படிப்பேன் எனச் சொல்ல முடியாது. இங்கு பா.ஜ.க. அரசு இல்லை. இங்கு ஒரு பதற்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார்.

**கேள்வி:** ஆளுநர் அவையில் இருக்கும் போதே, அவரைக் கண்டிக்கும் வகையிலோ, ஆளுநர் பேசியதை நீக்கும் வகையிலோ தீர்மானத்தைக் கொண்டு வருவது மரபுகளை மீறிய செயல் என்கிறார்கள் எதிர்க்கட்சிகள்...

**பதில்:** கண்டிப்பாக செய்யலாம். இது என்ன பெரிய விஷயமா? ஆளுநர் பெரிய தவறைச் செய்துவிட்டார். அதைச் சரிசெய்ய வேண்டும். ஆகவே அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருகி றார்கள். அந்தத் தீர்மானம் கண்ணிய மாகத்தானே இருந்தது? ஏதோ குறை சொல்ல வேண்டுமெனச் சொல்கிறார் கள். இப்படிச் சொல்பவர்கள் ஆளுநரை மறைமுகமாக ஆதரிப்பதாகத்தான் நினைக்கிறேன்.

கேள்வி: ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் மோதல்கள் நீடிக்கும் நிலையில், மசோதாக்கள் நிலுவையில் உள்ள நிலையில், மாநில அரசுக்கு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன?

**பதில்:** பல சட்ட உரிமைகள் இருக்கின்றன. அரசியல்சாஸன உரிமைகள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றம் பல முறை அதைச் சொல்லியிருக்கிறது. மத்திய அரசு ஆளுநரைப் பயன்படுத்தி பல தவறுகளைச் செய்கிறது. அதனால்தான் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் ஆளுநர் பதவியையே ஒழித்துவிட வேண்டுமெனச் சொன்னார். இப்படியெல்லாம் நடந்தால் ஆளுநர் பதவியே தேவையில்லை என்றுதான் மக்கள் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி:** ஆளுநர் உரை, ஆளுநருக்கு வழங்கப்பட்ட பிறகு அதில் திருத்தங்கள் தேவை என ஆளுநர் கேட்க முடியுமா?

**பதில்:** கேட்கலாம். ஆனால், அரசின் முடிவுதான் இறுதியானது. ஆளுநர் பதவி என்பது ஒரு அலங்காரப் பதவிதான். நாடாளுமன்ற முறையில் அப்படித்தான் இருக்க முடியும். பிரிட்டிஷ் நாடாளுமன்ற முறையை நாம் பின்பற்றுகிறோம். அங்கு, அரசு எழுதிக் கொடுப்பதையே அரசர்கள் வாசிப்பார்கள். நம் குடியரசுத் தலைவரும் அதைத்தான் செய்கிறார். எந்தக் குடியரசுத் தலைவராவது மாற்றிப் படித்திருக்கிறார்களா? ஆளுநர்களுக்கு அதைவிட குறைவான அதிகாரம் தானே இருக்கிறது. இது அரசியல்சாஸன மரபுகளுக்கு மாறானது.



**கேள்வி:** ஆளுநர் வெளியிலும் தனிப்பட்ட முறையில் பல கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். அது பல தருணங்களில் சர்ச்சைகளை ஏற்படுத்தும் விதத்தில் இருப்பதாக ஆளும் தரப்பினர் சொல்கிறார்கள். குறிப்பாக, சமீபத்தில் தமிழ்நாடு - தமிழகம் குறித்த ஆளுநரின் பேச்சுகூட இப்படி சர்ச்சையானது. இதுபோல ஆளுநர்கள் கருத்துக்களைச் சொல்லி, விவாதங்களை ஏற்படுத்த முடியுமா?

**பதில்:** இதெல்லாம் பா.ஜ.கவுக்காக செய்யும் விஷயம். அப்படிச் செய்யக் கூடாது. மீறிச் செய்தால், மக்கள் கண்டிப்பார்கள். பொதுவாக ஆளுநரை யாரும் கடுமையாகக் கண்டிக்க மாட்டார்கள். விமர்சிக்க மாட்டார்கள். ஆனால், இதுபோலச் செய்தால், விளைவுகளைச் சந்திக்கத்தான் வேண்டும். பலர் அவருக்கு எதிராகப் பேசுவார்கள். ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டுமென கோரிக்கை வரும். எதும் திட்டமிட்டு செய்கிறாரா, அல்லது தெரியாமல் செய்கிறாரா எனத் தெரியவில்லை. ஆனால், வன்மையாக கண்டிக்க வேண்டிய போக்கு இது.

**கேள்வி:** ஆளுநரின் செயல்பாடுகள், இங்குள்ள பா.ஜ.கவுக்கு பலனளிக்குமா?

**பதில்:** பெரும்பாலும் விளைவு எதிராகத்தான் இருக்கும். அவர் தப்புக் கணக்குப் போடுகிறார். அந்தக் கட்சி மீதும் கட்சித் தொண்டர்கள் மீதும் வெறுப்பு ஏற்படும். தவறு செய்கிறார்கள் என்று நினைப்பார்கள். அவர் சில சமயங்களில் வேண்டுமென்றே செய்கிறார், சில சமயங்களில் தெரியாமல் செய்கிறார். அவருக்கு தமிழ்நாட்டின் வரலாறு தெரியுமா? எப்படி தமிழ்நாடு எனப் பெயர் வந்தது எனத் தெரியுமா?. அவருடைய அர்த்தமில்லாத பேச்சுகளை ஊடகங்கள் விவாதிக்கத்தேவையில்லை.

**கேள்வி:** அரசியல்சாஸன மரபுகளை மீறி ஆளுநர் செயல்படும்போது ஆளும் அரசுக்கு என்ன வழி இருக்கிறது? ஒவ்வொரு முறையும் உச்ச நீதிமன்றத்தை நாட முடியுமா?

**பதில்:** எதிர்க்கத்தான் வேண்டும். இப்போது செய்ததைப் போல தீர்மானம் கொண்டுவரலாம். எல்லா மசோதாக்களையும் அவர் வைத்துக்கொள்கிறார். தில்லிக்கு அனுப்ப மறுக்கிறார். எத்தனை மசோதாக்கள் நிலுவையில் உள்ளன என்பதே மறந்துவிட்டது. அவருக்கு எதிராக அரசியல் ரீதியாகத்தான் செயல்பட வேண்டும். ஆளுநரைப் பொறுத்தவரை பிரச்சனை ஏற்படுத்த நினைக்கிறார். அவரால் எதுவும் செய்ய முடியாது.

**“எதைப் படிக்கலாம், எதைப் படிக்கக்கூடாது எனத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கு இல்லை. அமைச்சரவை முடிவுசெய்து எதைக் கொடுக்கிறதோ, அதைத்தான் படிக்க வேண்டும். அவர்கள் கண்ணியமாகத்தான் எழுதியிருக்கிறார்கள். அவர் அதைத்தான் படிக்க வேண்டும்.”**

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் விழா இசைச் சங்கமம் 2023 விபரங்கள் அடுத்த வாரம்**



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2023 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்,**
**படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
கனடா பெருமையுடன் வழங்கும்

UHCOSA Est 1994

உரும்பிராய் பாடசாலைகளின்


# 27 வது பொங்கல் விழா

## PONGAL VIZHA




தொடரும் பொங்கல் விழாவில்
அதி சிறந்த இயல், இசை, நாடக
நிகழ்வுகளை கண்டுகளிக்க
அரியதோர் வாய்ப்பு.

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி
சனிக்கிழமை மாலை 5 : 30 மணி



**Saturday, January 21st, 2023 @ 5.30 pm**

**THAMIL ISAI KALAA MANRAM**
**1120 TAPSCOTT RD, SCARBOROUGH M1X 1E8**

மேலதிக விரங்களுக்கு :
கதிரமலைநாதன் : 647 287 4738
சுமி : 647 710 7816
வரதன்: 416 805 7392
urumpiraischoolsosa.ca@gmail.com

விளம்பர அனுசரணையாளர். சாந்தா பஞ்சலிங்கம்



# பிச்சை எடுக்கப் பேச்சுவார்த்தை?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

2023ஆம் ஆண்டிலாவது உலக நாடு களிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அவர்கள் அரசாங்கத் திடம் வேண்டுகோள் விடுத்திருக்கி றார். ஆனால் நாடு இந்த ஆண்டு மட்டுமல்ல இனி வரும் ஆண்டு களிலும் பிச்சை எடுக்காமல் தப்பிப் பிழைக்க முடியாது என்பதே மெய் நிலை ஆகும்.

பன்னாட்டு நாணய நிதியம் தரும் சிறிய உதவி கடனைத் தீர்க்கப் போதாது. அது 2.8பில்லியன்கள் மட் டும் தான். ஆனால் நாட்டின் மொத்த கடன் தொகை 50பில்லியன்களை விட அதிகம். எனவே கடன் வாங்கி கடனை அடைக்க முடியாது. பன்னா ட்டு நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கங்கள் கடன் வாங்குவது இது தான் முதல் தடவையுமல்ல. இதற்கு முன் பதினாறு தடவைகள் கடன் வாங்கியிருக்கின்றன.

அதில் ஏழு தடவைகள் பன்னாட்டு நாணய நிதியத்தோடு பொருந்திக் கொண்ட உடன்படிக்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தவில்லை. இந்நிலையில் கடனை வாங்கிக் கடனை அடை ப்பது என்பதற்கும் அப்பால், கடனே இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழு ப்ப முடியாது. கடன் இல்லாத ஒரு நாட்டை அல்லது பிச்சை எடுக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவது என்றால் ஒரே ஒரு வழி தான் உண்டு. அது இனப்பிரச்சினை தீர்ப்பது தான். இனப்பிரச்சினை தான் நாட்டை கடனாளியாக்கியது. கடன் வாங்கி, கடன் வாங்கி யுத்தம் செய்தார்கள். வாங்கிய கடனில் வெடிமருந்து வாங்கி கடனைக் கரியாக்கினார்கள். தமது சொந்த மக்களையே கொன்று குவித் தார்கள். இப்பொழுது மீள முடியாத கடனில் நாடு சிக்கிவிட்டது.

இவ்வாறாக கடன் வாங்கி அல்லது பிச்சையெடுத்து யுத்தம் செய்த ஒரு நாடு இப்பொழுது பிச்சை எடுப்பதற் காக சமாதானம் செய்கிறது என்பது தான் நூதனமான ஒரு மாற்றம். ஆனால் பிச்சையெடுத்துச் செய்த யுத்தம் உண்மையானது. பிச்சை எடுப்பதற்காக செய்யும் சமாதானம் உண்மையானதா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

உண்மையாகவோ அல்லது பொய்யா கவோ பேச்சுவார்த்தைகள் நடக்கப் போகின்றன. கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இப் பேச்சுவார்த்தைகளில் சிங்களத்தலைவர்கள் மாறியிருக்கிறார் கள். தமிழ்த்தலைவர்களும் மாறியிக் கிறார்கள். இதில் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் மாறாமல் இருந்த ஒரே தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தின் தலைவர் தான். அவர் ஐந்து சிங்களத் தலைவர்களோடு பேசியிரு க்கிறார். இப்பொழுது கடந்த 13 ஆண்டுகளாக சம்பந்தர் பேசி வரு கிறார்.

கடந்த 75ஆண்டு கால அனுபவத்தின் படி பேசுவதற்கு புதிதாக விடயங்கள் கிடையாது.ஒரே ஒரு விடயத்தில் துணிச்சலான முடிவை எடுத்தால் சரி. நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமை ப்பை உடைத்து ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் தயாராக இருந்தால் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும். ஆனால் இலங்கைத்தீவின் துயரம் எதுவென்றால், சிங்கள மக்கள் மத்தியில் அதிகம் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை சமஸ்ரி என்பது தான்.

உலகின் மிகச்செழிப்பான ஜனநாயக நாடுகளில் நாட்டை ஒரு தேசமாக கட்டியெழுப்பும் சமஸ்ரிக் கட்டமைப் பானது இலங்கைத்தீவில் நாட்டை பிரிக்கக்கூடியது என்று கருதப்படு கிறது.

கடந்த 75 ஆண்டு காலப்பகுதிக்குள் நிகழ்ந்த பிரதான தீர்வு முயற்சிகளை பின்வருமாறு தொகுக்கலாம். 1957-இல் பிராந்திய சபைகள். 1965இல் மாவட்ட சபைகள். அதன்பின் 1980 இல் தென்னகோன் அறிக்கை. 1981ல் மாவட்ட அபிவிருத்தி சபைகள். 1983 இல் மாவட்ட மட்ட அதிகார பரவலா க்கம். 1986 இல் இரண்டு தமிழ் மாகா ணங்கள் என்ற யோசனை. 1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை. 1992இல் நாடாளுமன்ற தெரிவுக் குழு வின் அறிக்கை. 1995இல் சந்திரிகாவின் பிராந்தியங்களின் ஒன்றியம் அதன்பின். 2002இல் ஒஸ்லோ பிரகடனம். 2003இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை. 2005இல் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பு.2009க்குப் பின் மகிந்தவின் 13பிளஸ். 2015இலிருந்து 2018 வரையிலுமான ரணில்-சம்பந்தன் கூட்டின் எக்கிய ராஜ்ய. இதில் 1965இல் திருமதி சிறிமாவோவின் அணிக்குள்ளி ருந்த என்.எம். பெரேரா சமஸ்ரிப் பண்புடைய ஒரு தீர்வு யோசனையை முன்வைக்கத் தயாராகக் காணப்பட் டார் என்றும் ஆனால் தமிழ்த் தரப்பு அதனை சமயோசிதமாகக் கையாள வில்லை என்றும் ஒரு விமர்சனம் உண்டு. அம்முயற்சி கருவிலேயே கைவிடப்பட்டது.



மேற்கண்ட தீர்வு முயற்சிகளையும் தீர்வுத் திட்டங்களையும் யார் குழப்பி னார்கள் ஏன் குழப்பினார்கள்? என்ப வற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்ன?

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னும் பின்னுமான மிதவாத அரசியலில் நிகழ்ந்த பெரும்பாலான பேச்சுவார் த்தைகளில் சமஸ்ரிப் பண்புடைய அல்லது ஒற்றையாட்சி கட்டமைப்பு க்கு வெளியே வருவது போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும் தீர்வு யோசனைகளை ஒன்றில் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது கருவிலேயே கைவிட்டிருக்கி றார்கள். அல்லது முதலில் ஏற்றுக் கொண்டு பின்னர் குழப்பியிருக்கிறார் கள். அதே சமயம் தமிழ்த் தலைவர்கள் ஒற்றையாட்சிப் பண்புடைய தீர்வு முன் மொழிவுகளை பெரும்பாலும் நிராகரித்திருக்கிறார்கள். அல்லது முதலில் நம்பிக்கை வைத்து பின்னர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தான் ஒப்பீட்டளவில் உயர்வான தீர்வு யோசனைகள் முன் வைக்கப்பட்டன. அதற்குக் காரணம் நாட்டின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி ஆயுதப் போராட்டத்திற்கு இருந் தது. 2009க்குப்பின் ஒரு சிங்கள தொலைக்காட்சி திருமதி. சந்திரிக் காவை மேற்கண்டபோது நீங்கள் முன்பு வழங்க தயாராக இருந்த பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு இப்பொழுது பொருத்தமானதா?'' என்ற தொனிப்பட ஒரு கேள்வி கேட்க ப்பட்டது. அதற்கு அவர் இல்லை.இப்பொழுது அதற்குத் தேவை இல்லை. ஏனென் றால் இப்பொழுது ஆயுதப் போராட்டம் இல்லை. என்ற பொருள்பட பதில் கூறி யுள்ளார். அதுதான் உண்மை. நாட் டின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி இப்பொழுது தமிழ் அரசியலுக்கு இல்லை. அதனால் தான், பிரிக்கப்பட முடியாத, பிளவுபடாத நாட்டுக்குள் சமஸ்ரி என்று கூற வேண்டியிருக்கிறது. ஆனால் சமஸ்ரி க்கு சிங்களத் தலைவர்கள் தயாரா?

2012ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி செல்வ நாயகத்தின் பேத்தி ஒரு நேர்காண லுக்காக சர்வோதயம் அமைப்பின் தலைவர் ஆரியரட்ணாவை சந்தித்த போது அவர் சமஸ்ரி பற்றிக் கூறி யதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தன்னுடைய சிறுவயதில் 1950கள் 60களிலேயே சமஸ்ரி என்பது ஒரு பிரிவினைக் கோரிக்கையாக வியாக்கி யானம் செய்யப்பட்டது என்று ஆரிய ரட்ணா கூறியிருக்கிறார். ஆனால் ஏறக் குறைய அரை நூற்றாண்டுக்கு பின்ன ரும் நிலைமை அப்படித் தான் உள் ளது.

எனவே ஒரு சமஸ்ரித் தீர்வை நோக்கி சிங்கள மக்களின் கூட்டு உளவியலை தயார்படுத்தும் பொறுப்பை ரணில் ஏற்றுக் கொள்வாரா? அதற்குத் தேவை யான அரசியல் திடசித்தம் அவரிடம் உண்டா? அதற்குத் தேவையான மக்கள் ஆணை அவருக்குண்டா?

அவர் தனது அரசியல் எதிரிகளின் பலத்தில் தங்கியிருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் ராஜ பக்சகளின் வேட்பாளராக களமிறங்கக் கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. எனவே ராஜபக்சக்களை மீறி ஒரு தீர்வை அவர் தர மாட்டார். ராஜ பக்சக்கள் 13பிளஸ் தான் தங்களால் தரக்கூடிய தீர்வு என்று ஏற்கனவே சொல்லி விட்டார்கள்.

சஜித் பிரேமதாசவும் 13ஐ முழுமை யாக அமல்படுத்துவதே தமது தீர்வு என்று கூறுகிறார். இப்படிப் பார்த்தால் 13ஆவது திருத்தத்தைத் தாண்டிச் செல்வதற்கு மகிந்தவும் தயாரில்லை சஜித்தும் தயாரில்லை. பதின்மூன்றா வது திருத்தத்தை தொடர்ந்து வலியு றுத்துவதன் மூலம் சிங்களத் தலைவர் கள் இந்தியாவையும் தமது நிகழ்ச்சி நிரலின் பங்காளிகளாக்கலாமா என்று யோசிக்கக்கூடும்.

கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்கிறார். அவர் பதவி யேற்ற காலத்தில் இருந்ததை விடவும் இப்பொழுது அவருக்கும் இந்தியா வுக்கும் இடையிலான உறவு ஒப்பீட்ட ளவில் சுமூகமாகி வருகிறது. பலாலி விமான நிலையத்தை மறுபடியும் திறந்து விட்டார். காங்கேசன்துறை க்கும் காரைக்காலுக்கும் இடையே ஒரு பயணிகள் போக்குவரத்து சேவை யும் விரைவில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்.அடுத்த சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலும் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட யாழ் கலாச்சார மையத்தை ஒரு இந்திய தலைவர் வந்து திறந்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படு கிறது. முதலில் இந்தியப் பிரதமர் மோடி வருவார் என்று கூறப்பட்டது. பின்னர் இந்திய ஜனாதிபதி வருவார் என்று கூறப்பட்டது. இப்பொழுது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யார் வந்தாலும் அது ஒரு கோலா கலமான விழாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு கலாச்சார மையத்தை கையளிக்கும் விழாவை இலங்கையின் சுதந்திரதின விழாவின் ஒரு பகுதியாக ஒழுங்கமைப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கான இந்தியா வின் உதவிகள் எவையும் இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்கு வெளியே இல்லை என்ற செய்தி இந்தியாவுக்கும் தரப்படும்.

தமிழ் மக்களுக்கும் தரப்படும். இவ்வாறாக, கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நோக்கி முன்னெடுக்கும் நகர்வுகளைத் தொகுத்துப் பார்த்தால், அவர் பேச்சு வார்த்தைகளிலும் இந்தியாவின் ஒத்து ழைப்பை மறைமுகமாகப் பெற முயற்சிக்கலாம் என்று தெரிகிறது.

13-வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த போகிறோம் என்று அரசாங்கம் கூறுமாக இருந்தால் அது இந்தியாவுக்கும் விருப்பமாகத் தான் இருக்கும். கடந்த வெள்ளிக்கிழமை ஆறாம் தேதி தமிழ்நாட்டில் ஒரு கருத் தரங்கு இடம் பெற்றது

அதன் தலைப்பு 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்வை ஈழத்தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய ஒன்றிய அரசைக் கோரும் நோக்கிலானது. அதில் சுமந்திரனும் பங்கு பற்றினார். எனவே நடக்கவிருக்கும் பேச்சுவார்த் தைகள் 13-வது திருத்தத்தை தாண் டாமல் இருப்பதற்கு ரணில் இந்தியா விடமிருந்து உதவியை எதிர்பார்க்கக் கூடும். அவரைப் பொறுத்தவரை ஒரு புறம் பிச்சையெடுப்பதற்காகச் சமாதா னம் செய்ய வேண்டியிருக்கிறது. இன்னொரு புறம் அவருடைய வயோ திப காலத்தில் அவருக்கு கிடைத் திருக்கும் சிம்மாசனத்தை சமாதானத் துக்காகத் தியாகம் செய்யவும் முடி யாது. பிச்சையா? சமாதானமா? அரச போகமா?



# தமிழ்நாடு என்ற பெயரும் தொடரும் சர்ச்சைகளும் பின்னணி என்ன?

தமிழ்நாடு என்ற பெயருக்கு பதில் தமிழகம் என்பதே சரியாக இருக்கும், ஆங்கிலேயர்கள் காலத்தில் தான் மாநிலங்கள் உருவாக்கப்பட்டதால் பாரதத்தின் பகுதி தமிழகம் என்பது தான் சரி' என தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அண்மையில் தெரிவித்த கருத்து பெரும் சர்சையாகியுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்தின் ஒரு பகுதியாக உத்தர பிரதேசம் மாநிலம் வாரணாசியில் காசி தமிழ்ச்சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களை சிறப்பிக்கும் வகையில் கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில் தான் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி இந்தக் கருத்தை தெரிவித்திருந்தார்.

ஆளுநரின் இந்தக் கருத்தைக் கண்டித்து திமுக மூத்த தலைவர் டி.ஆர்.பாலு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். தமிழ்நாட்டில் பிரிவினையையும், குழப்பத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தும் ஒற்றை நோக்கத்துடன் நாள்தோறும் சர்ச்சைக்குரிய கருத்துக்களையும் செயல்பாடுகளையும் ஆளுநர் வெளிப்படுத்தி வருவதாக அந்த அறிக்கையில் டி.ஆர்.பாலு குறிப்பிட்டிருக்கிறார்.

அண்மைக் காலங்களில் தமிழ், தமிழ்நாடு, திராவிடம், திராவிட இயக்கம் மற்றும் சனாதனம் குறித்து ஆளுநர் ஆர்.என்.ரவி பேசும் கருத்துகள் அனைத்தும் தொடர் சர்ச்சையாகி வருகின்றன.

## தமிழ்நாடு என்ற சொல்லின் தொன்மை

இந்தியா என்ற சொல் புழக்கத்திற்கு வருவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாடு என்ற சொல் புழக்கத்திற்கு வந்து விட்டதாகக் கூறுகிறார் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர் தியாகு.



இந்தியா என்ற பெயர் பழக்கத்திற்கு வருவதற்குப் பல நூறாண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்நாடு என்ற பெயர் புழக்கத்திற்கு வந்து விட்டது. 'இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இது நீ கருதினை ஆயின்' என்று தான் சேரன் செங்குட்டுவனை சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் புகழ்ந்துள்ளார். இதேபோல பரிபாடலிலும் தமிழ்நாடு என்ற சொல் உள்ளது'' என்கிறார் தியாகு.

தமிழ்நாடு என்ற பெயரின் பின்னணி குறித்துப் பேசிய அவர், தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கை. காங்கிரஸ் கட்சியினர் மெட்ராஸ், மதராஸ், சென்னை என மூன்று பெயர்களைப் பயன்படுத்தி வந்தனர். இதை மாற்றி தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று சொன்ன போது, வேறு நாட்டினர் தவறாகப் புரிந்து கொள்வார்கள் என்று காமராஜர் சொன்னார்.

அந்தக் காலகட்டத்தில் ப்ளீடிங் மெட்ராஸ் என்று ஒரு துணி இங்கிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தது. எனவே மெட்ராஸ் என்றால்தான் வெளிநாட்டினருக்குத் தெரியும், தமிழ்நாடு என்று வைத்தால் எப்படி அவர்களுக்கு புரியும், இந்தத் துணி விற்பனை ஆக வேண்டாமா, நமக்கு ஏற்றுமதி, இறக்குமதி நடக்க வேண்டுமென்றால் மெட்ராஸ் என்ற பெயர்தான் சரியாக இருக்கும், தமிழில் வேண்டுமானால் சென்னை என்று வைத்துக் கொள்வோம் என காமராஜர் சொன்னார்.

பின்னர், திமுக, கம்யூ னிஸ்ட் கட்சி மற்றும் மபொசியின் தமிழரசுக் கழகம் போன்ற தமிழ்த்தேசிய அமைப்புகள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தினர். காங்கிரஸ்காரராக இருந்தாலும் பெயர் மாற்றத்திற்காக 72 நாட்கள் பட்டினி போராட்டம் நடத்தி சங்கரலிங்கனார் உயிர்த்தியாகம் செய்தார்.

முதலில், தமிழ்'நாடு' என்ற பெயர் வைத்தால் இந்தியா என்ன என்று பக்தவச்சலம் சட்டமன்றத்திலேயே எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், கோரிக்கை தொடர்ந்து வலுத்த பிறகு அனைவருமே ஏற்றுக் கொண்டனர். 1967இல் சி.என். அண்ணாதுரை தலைமையிலான தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ்நாடு என்றே மாநிலத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கான தீர்மானம் 1967 ஜீலை 18ஆம் தேதியன்று கொண்டு வரப்பட்டது. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது அனைவருமே வெல்க தமிழ்நாடு என்று ஒருமனதாக முழக்கம் எழுப்பினர். அந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற ஒருவருடம் வரை காலம் எடுத்தது.



அதற்கெல்லாம் முன்பு நாடாளுமன்றத்தில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி உறுப்பினர் பூபேஷ் குப்தா இது தொடர்பாக தனிநபர் மசோதா ஒன்றை தாக்கல் செய்திருந்தார். ஆனால், அந்த மசோதாவை காங்கிரஸ் கட்சியினர் தோற்கடித்தனர் என்றார் தியாகு.

## இந்தியாவிற்கு எதிரானது அல்ல

தனித்த கலாசாரம், பண்பாடு கொண்ட இனத்திற்கு தனித்தேசியம் இருப்பது இயல்பானது தான் என்கிறார் வரலாற்று பேராசிரியர் கருணானந்தன். இந்தியா என்ற நாடு உருவாவதற்கு முன்னரே தமிழ் என்ற மொழி இருக்கிறது. அதையொட்டி தனி கலாசாரம் மற்றும் பண்பாடு உள்ளது அப்படியென்றால் அவர்களுக்கென தனித்தேசியம் இருப்பது இயல்பானதுதான். ரஷ்யாவில் சோவியத் யூனியன் இருந்த போது கூட அதில் இருந்த நாடுகளில் கஜகஸ்தான் போன்று தான் என்ற பெயருடன் முடியும் நாடுகள் இருந்தன. அதில் உள்ள தான் என்பதும் தமிழ்நாடு என்பதில் உள்ள நாடும் ஒரே பொருள் தான் கொள்ளும்.

உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், இமாச்சல பிரதேசம் போல தமிழ்நாட்டின் பெயரும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். பிரதேசம் என்றால் தேசத்தின் துணைப் பகுதி என்ற பொருள் வரும். அதைத் தான் ஒற்றை இந்தியா தத்துவம் கொண்டவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தனித்தன்மை கொண்ட நாடுகளின் ஒருங்கிணைப்பு தான் இந்தியா. அந்த தனித்தன்மையை இல்லாமல் ஆக்க வேண்டும் என்பது தான் இவர்களது எண்ணமாக இருக்கிறது.

இவர்களுக்கு நாடு என்பதில் பிரச்னை இல்லை. தமிழ் நாடு என்பதில் தான் பிரச்சனை. கொஞ்ச காலத்திற்கு முன் இவர்கள் தான் கொங்கு நாடு, கொங்கு தேசம் என்று ஆரம்பித்தார்கள். அது இவர்கள் சொல்லும் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராக இல்லையா?

தமிழ்நாடு என்பது தமிழர்களின் ஒற்றுமையைக் குறிப்பதற்கான சொல்தானே ஒழிய இந்தியாவிற்கு எதிரானது அல்ல. இந்தப் பெயரை மாற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் இந்தப் பெயரால் என்ன பிரச்சனை என்று விளக்க வேண்டும்.



இதே ஆளுநர் தான் சனாதனம், ஆன்மிகம் குறித்தெல்லாம் பேசினார். அவர் இவ்வாறு பேசுவதெல்லாம் அரசியலமைப்பிற்கு முரணான செயல். இந்தியா என்றைக்கும் ஒற்றை நாடாக இருந்தது இல்லை. அவ்வாறு சொல்வது அப்பட்டமான பொய். பொறுப்பில் இருக்கும் ஆளுநர் அந்தப் பொய்யைச் சொல்லக் கூடாது'' என்கிறார் வரலாற்று பேராசிரியர் கருணானந்தன்.

தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்குப் பிறகு நீண்ட போராட்டமும், தியாகமும் இருப்பதாகக் கூறும் தியாகு தமிழ்நாடு ஆளுநர் என்ற பெயரில் தான் ஆர்.என்.ரவி சம்பளம் வாங்குகிறார், கொள்கைப் பிடிப்பாளராக அவர் இருந்தால் தனக்கு சம்பளம் வேண்டாம் எனக் கூறட்டும் என்கிறார். நன்றி:- பிபிசி

# தமிழ்த் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் அவர்களால் கொழும்பில் பாதுகாப்பாகவும் மகிழ்சியாகவும் இருக்க முடிந்தது. ஏனெனில் அவர்கள் பேசும் தேசியத்தால் ஆளும் வர்க்கத்தை அசைக்க முடியாது. எப்போது ஆளும் வர்க்கத்தின் இருப்பிற்கு ஒரு கருத்து அல்லது நிலைப்பாடு அச்சுறுத்தலாக மாறுகின்றதோ, அப்போதுதான் அதன் மீது அவர்களது பார்வை திரும்பும். இப்போது. வடக்கு கிழக்கிலிருந்து தமிழ் தேசியத்தை உச்சரிப்போரை கொழும்பு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் என்ன செய்ய முடியுமென்னும் கேள்வியுடன் தான், தமிழ் தேசிய அரசியல் தரித்து நிற்கின்றது. இரண்டு தெரிவுகள் தான் உண்டு. ஒன்று கிடைக்கும் சந்தர்பங்கள் ஒவ்வொன்றையும் உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுவது.

இரண்டு, அதற்கு தயாரில்லையென்றால், போராடுவது. அந்தப் போராட்டம் இதுவரையில் இடம்பெற்ற அனைத்து போராட்டங்களையும் கடந்து நிற்பதாகவும், கொழும்மை மட்டுமல்ல, பிராந்திய சக்தியான இந்தியாவையும் திரும்பிப் பார்க்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும்.

அப்படியொரு போராட்டத்தை தமிழர்களால் முன்னெடுக்க முடியுமா? மக்களை தங்கள் பின்னால் திரண்டு வரச் செய்யக் கூடிய தமிழ் ஆளுமைகள் இருக்கின்றனரா? எழுக தமிழ், பொத்துவில் — பொலிகண்டி இந்த அணுகுமுறைகள், அதே போன்று, அண்மையில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவென்னும் பெயரில் முன்னெடுக்கப்படும் அரசுசாரா நிறுவனங்களின் சமஸ்டிக் கதைகள், அனைத்துமே தோல்வியுற்ற அணுகுமுறைகளாகும்.

இவ்வாறான அணுகுமுறைகளுக்கு கொழும்பு இறங்கி வருமென்றால் நிலைமைகள் எப்போதே மாறியிருக்க வேண்டுமல்லவா! நாங்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் வகையில், அரசியல் ஆதாயங்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதால், ஒரு போதுமே முன்னோக்கி பயணிக்க முடியாது. ஒன்றில் இருப்பதிலிருந்து செல்ல வேண்டும் அல்லது அடையும் வரையில் போராட வேண்டும். அவ்வாறானதொரு போராட்டமென்பது இரத்தம் தோய்ந்தது. இன்றைய உலக ஒழுங்கில் இரத்தம் தோய்ந்த போராட்டங்களின் பெயர் யுத்தமாகும். தமிழ் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023
"இசைச் சங்கமம் 2023"

# திருந்தாத இலங்கை அரசியல்வாதிகள்!

எங்களிடம் நேரம் இருக்கிறது..! உங்களிடம் கடிகாரம் இருக்கிறது..!! இது ஒரு ஆபிரிக்க முதுமொழி. எங்களுக்கு போதுமான நேரம் இருக்கிறது. நேர அழுத்தம் இல்லை. நினைத்த நேரம் வருவோம் போவோம். ஆனால் உங்களுக்கு அந்தளவு நேரம் இல்லை. இதனால் எல்லாவற்றையும் மணிக்கூட்டைப் பார்த்து திட்டமிடுகிறீர்கள். செய்கிறீர்கள் என்று ஆபிரிக்கா ஐரோப்பாவுக்கு சொன்ன வார்த்தைகள் இவை.

இது நேரத்திற்கு ஆபிரிக்காவும், ஐரோப்பாவும் கொடுக்கின்ற இரு வேறுபட்ட சிந்தனை, கலாச்சாரம், கல்வியூட்டல் சார்ந்த மனநிலை இடைவெளி. பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளின் நேரம் குறித்த கருத்தியலும் இது தான். இதற்கு இலங்கையும் விலக்கல்ல

இதுவே 21.12.2022 அன்று கொழும்பில் சமூக வலுஊட்டல் அமைச்சில் நடந்த சந்திப்பொன்றில், தென்கொரிய பேரழிவு நிவாரண நிறுவனத்தின் தலைவர் இலங்கை இராஜாங்க அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் வகுப்பெடுக்க காரணம். பாடசாலைகளில் புள்ளிப் பரீட்சையில் சித்திபெற நேரக்கணக்கு கற்பிக்கப்படுகிறது. ஆனால் வாழ்க்கைப் பரீட்சையில் சித்தி பெற நேரத்தின் முக்கித்துவம் கற்பிக்கப்படுவதில்லை. வெறும் நேரசூசி மட்டும் இதைச் சாதிக்க முடியாது. இதுதான் எங்கள் கல்விமுறை.

முன்கூட்டியே இரு தரப்பும் இணங்கிக் கொண்ட சந்திப்புக்கு 30 நிமிடங்கள் எந்த முன்னறிவிப்பும் இன்றி, மன்னிப்பும் இன்றி காலதாமதமாக வந்த சமூகவலுஊட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபவ பாஸ்குவல் மற்றும் அதிகாரிகளைப் பார்த்து தென்கொரிய ஜூமுனுசுகு அறக்கட்டளை தலைவர் சோசங் லியா சொன்னது ஆபிரிக்க முது மொழியை நினைவூட்டுகிறது. இத்தனைக்கும் அமைச்சரின் சொந்த அமைச்சில் நடந்த கூட்டம் இது.

**IF A MEETING IS SCHEDULED FOR A SPECIFE TIME IT MUST BEGIN AT THE TIME. IF SUCH MINISTERS CANNOT DO THAT THERE IS NO POINT IN MEETING SUCH PERSON** என்று அமைச்சர் அனுபவ பஸ்குவல் முகத்தில் அறைந்துள்ளார் லியா.

லியாவின் கடுமையான, வெளிப்படைத் தன்மையான, முகத்திற்கு நேரே கூறிய இந்த வார்த்தைகளை நெப்போலியன் வார்த்தைகளில் மறுவாசிப்பு செய்வதானால் கடத்தல்கார்களை மன்னிக்கலாம் நேரத்தை கடத்துபவர்களை மன்னிக்க முடியாது.

லியாவின் உரை இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியலில் இருக்கின்ற தலைமைத்துவ குறைபாடுகளை கோடிட்டுக் காட்டுகின்றது.

செயற்றிறன் அற்ற அரச நிர்வாகத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறது.

சர்வதேச நாடுகளில் எல்லாவகையிலும் தங்கியிருக்கின்ற இலங்கை போன்ற ஒரு நாடு அந்த நாடுகளுடனான தொடர்புகளின் போது ஆகக் குறைந்த பட்சம் நேரத்தின் முக்கியத்துவம், பெறுமதி, தரம் என்பனவற்றைப் பேண வேண்டும். அதைச் செய்யாமல் சிங்கப்பூராக்குவோம், கோலாலம்பூராக்குவோம், தாய்வானாக்குவோம், ஹொங்கொங் ஆக்குவோம் என்பதெல்லாம் வெறும் வெடிகள். முதலில் ஆகக் குறைந்தது அந்த நாடுகள் நேரத்திற்கு கொடுத்திருக்கின்ற முக்கியத்துவத்தையாவது கொடுக்க வேண்டாமா....?

பொய் சொல்வதும், வாக்குறுதிகளை வழங்குவதும் இலங்கையில் ஒரு கலாச்சாரமாகி விட்டது. அரசாங்க அதிகாரிகள் அரசர்கள் போல் செயற்படுகிறார்கள். கல்வி முறைமையிலும், சிந்தனை மாதிரியிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். என்று கூறுயுள்ளார் லியா. மேலும் கல்வி அபிவிருத்தி என்பது கட்டிடங்களில் இல்லை சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவதில் உள்ளது என்கிறார் அவர்.

**THERE SHOULD BE A CHANGE IN THE EDUCATION SYSTEM AND THE THINKING PATTERNS OF THE PEOPLE IN SRILANKA** லியாவின் வார்த்தைகளை பத்தோடு பதினொன்றாக கடந்து செல்ல நினைப்பது ஒரு சமூகத்தை தற்கொலைக்கு இட்டுச் செல்வதற்கு சமமானது. அவரது ஒவ்வொரு வார்த்தைகளும் முன்னேற்றம் அடைந்த ஒரு சக ஆசிய நாட்டின் அனுபவத்தை, பார்வையை, மதிப்பீட்டை, இலங்கைக்கு சொல்கிறது.



கடந்த 40 ஆண்டுகளில் தென்கொரியா எப்படி அபிவிருத்தி அடைந்தது என்பதைக் காட்டுகிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பேசப்படுகின்ற நேரம் தொடர்பான கூற்று ஒன்றும் உள்ளது. எங்களுக்கு நேரம் குறைவாக இல்லை, மாறாக கிடைக்கின்ற நேரத்தில் அதிகளவை நாம் பயன்படுத்துவதில்லை இது தான் இலங்கையில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினையே அன்றி நேரப் பற்றாக் குறை அல்ல.

ஏனெனில் ஒருநாளில் 24 மணித்தியாலங்கள் முழு உலகிற்கும் பொதுவானது , வரையறைக்குட்பட்டது. அருமையாக குறைவாக உள்ள நேரத்தை வரையறை அற்ற எமது தேவைகளுக்கு இடையே எப்படி பயன்படுத்துவது, பங்கிடுவது என்பதிலேயே நேரப் பயன்பாட்டுதிறன் தங்கியுள்ளது. இது நேர முகாமைத்துவம் **TIME MANAGEMENT** என்று அழைக்கப்படுகிறது. இந்த விடயம் வளர்ச்சியடைந்த நாடுகளில் பாலர் வகுப்பில் இருந்து கற்பித்தலில் உள்வாங்கப்பட்டுள்ளது. இலங்கை போன்ற முன் மாதிரியற்ற கல்வி முறையில் இது சாத்தியமா...? இதையே லியா இலங்கையின் கல்வி முறையோடு தொடர்புபடுத்தி பேசியுள்ளார்.

ஐரோப்பாவில் முதலாம் வகுப்பு பிள்ளை ஒன்றுக்கு பாடசாலையில் கொடுக்கப்படும் வீட்டுவேலைக்கான **-HOME WORK** நேரம் பத்து நிமிடங்கள் மட்டுமே. ஒவ்வொரு வகுப்பு ஏறும் போதும் பத்து பத்து நிமிடங்கள் கூடிக் கொண்டு போகும். தங்கள் பிள்ளை பத்து நிமிடத்தில் அந்த வேலையைச் செய்து முடிக்கிறதா என்பதை அவதானிப்பதே பெற்றோரின் வேலை.

பிள்ளை தவறாகப் செய்தாலும் பிழை திருத்தம் செய்யக்கூடாது. இது அப்பா, அம்மாவுக்கான வீட்டுவேலை அல்ல. அப்போது தான் ஆசிரியருக்கு தெரியும் பிள்ளைக்கு தான் கற்பித்த விடயம் விளங்கி இருக்கிறதா இல்லையா என் பது .

பெற்றோரின் உதவியுடன் பாடசாலை முடிந்த பின்னரான மிகுதி நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது, பங்கிடுவது என்பது பிள்ளையின் விருப்பத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். நண்பர்கள் தொடர்பு, விளையாட்டு, தொலைக் காட்சி சிறுவர் நிகழ்ச்சிகள், சங்கீதம் போன்றவற்றிற்காக நேர ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இங்கு ஆரம்பிக்கிறது நேர முகாமைத்துவம். பிள்ளையை விடிய, விடிய படிக்கச் சொன்னால், அதிகாலை நான்கு மணிக்கு நித்திரையில் இருந்து எழுப்பி விட்டு பாடமாக்கச் சொன்னால் நித்திரைக் குறைவால் பிள்ளை வகுப்பில் நித்திரை தூங்கும், கவனம் செலுத்தாது. சோர்வாக இருக்கும். விளைவு பெற்றோர் பாடசாலை நிர்வாகத்திற்கு பதிலளிக்க வேண்டி வரும். ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்தவர்களுக்கும் இந்த பழக்க தோசம் ஒரு பெரிய பிரச்சினையாகவே உள்ளது. இந்த நிலையை மாற்றுவதற்காக மேற்குலக நாடுகள் பெரும் முயற்சிகளைச் செய்தே குறைந்த பட்சம் வேலையிடங்களிலாவது நேரத்திற்கு சமூகமளிக்கின்ற இலக்கை அடைந்துள்ளன. வேலைத்தளத்திற்கு அப்பால் அழைப்பிதழில் குறிப்பிடப்படும் நேரத்திற்கு எம்மவர் எந்த நிகழ்வும் தொடங்குவதும் இல்லை முடிவதும் இல்லை.

லியாவின் உரை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படுவதை ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள். அந்த மொழிபெயர்ப்பாளர் பல தடவைகள் இவறாய் என்று மொழி பெயர்ப்பு செய்கிறார். இப்படி தென் கொரியாவில் நடந்தால் உங்களின் கதை முடிந்தது என்பது தான் அது. அந்த அளவுக்கு லியாவின் கண்டனக்குரல் உள்ளது. தென்கொரியாவில் இது போன்று நடக்குமாயின் விசாரணையும், ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படும் என்கிறார் லியா.

நேரத்திற்கு சமூகமளிப்பது என்பது ஒரு கலை. ஒரு கடமை. ஒரு பொறுப்பு. ஒரு நேர்மை. ஒரு கனவான் பண்பு. ஒரு மரியாதை. இதில் இருந்து தவறும் போது அது கடமையில் இருந்து தவறுவது, பொறுப்பற்ற செயல், நேர்மையீனம், கனவான் தனமற்றது, மரியாதையற்றது, மற்றவர் மனதைப் புண்படுத்துவதும், இழிவுபடுத்துவதற்கும் சமமானது. சந்திப்புக்கு நேரம் குறித்த இருதரப்புக்கும் நேரத்திற்கு சமூகளிக்கவேண்டிய தலையாய கடைப்பாடு உண்டு.

நேரம் குறித்த இந்த நோக்கு கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்தது இன்றைய கணனி-டிஜிட்டல் மயமாக்கத்திலும், உலகமயமாக்கத்திலும் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது. இதன் பொருளாதார தாற்பரியம் குறைந்த நேரத்தில் அதிகூடிய உற்பத்தியைத் பெறுவது. இது பண்டங்கள் உற்பத்தியை மட்டும் அல்ல சேவைகள் உற்பத்திக்கும் உரியது. தொழிலாளர்கள் இயந்திர வேகத்தில் இயங்க வேண்டிய மெசினுக்கு ஈடாக செயற்படவேண்டிய நிலை.

இந்த நேர அழுத்தம் சமகால கைத்தொழில் நாடுகளில் பல சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக உள, உடல் ஆரோக்கியத்திற்கு பாதகமானதாக அமைகிறது.

கட்டுரையாளர்:
- அழகு குணசீலன் -

முதலாளித்துவ உற்பத்தி முறையின் எதிர்மறை விளைவு இது. நேர அழுத்தம், இயந்திரவேகம், மிகச்சரியாகச் செய்ய வேண்டும் என்ற கட்டாயம், வேலைப்பளு எல்லாம் உள, உடல் ரீதியான பாதிப்புக்களுக்கு காரணமாகின்றன. சமகால வைத்திய உலகம் இந்த நோயை **BURNOUT** என்று அழைக்கிறது. உடல், உள இயக்கத்திற்கான சக்தி எரிந்து போன, பலவீனமான, வெறுமைத்தன்மை என்று சொல்லலாம்.

இதனால் கைத்தொழில் நாடுகளின் சிந்தனைகளில் ஏற்பட்டுவரும் மாற்றமானது முதலாளித்துவ உற்பத்திமுறைக்குள் தொழிலாளர்களின் நலனைப் பேணவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இலங்கையில் தோட்ட,தொழிற்சாலை, தினக்கூலிகளைத் தவிர அரசாங்க, தனியார் துறை உத்தியோகத்தர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் குறைவான உழைப்பையே வழங்குகின்றவர்களாக உள்ளனர். லியா சொல்லியது இந்தத் தரப்பினர் பற்றியதே

மறுபக்கத்தில் வெளிநாட்டு அதிகாரி ஒருவர் தனது விருந்தினர் நாடு ஒன்றுக்கு எதிராக இந்தளவுக்கு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி கடும் தொனியில் பேசமுடியுமா? என்ற கேள்வியும் எழுகிறது. உதவி வழங்குகிறோம் என்பதற்காக இறைமையுள்ள ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் கொள்கைகளை விமர்சனம் செய்ய முடியுமா? அதில் தலையீடு செய்ய முடியுமா? என்றும் சிலர் கேட்கிறார்கள்.

இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியை எல்லோரும் தங்கள் பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்களா..? இராஜாங்க அமைச்சர் 30 நிமிடங்கள் பிந்திவந்ததே லியாவின் இந்த கடுப்புக்கு காரணம். ஆனால் இராஜாங்க அமைச்சரோ தான் காலதாமதமாக செல்லவில்லை என்கிறார். அப்படியானால் இவ்வளவு பேசும் வரையும் இராஜாங்க அமைச்சர் மௌனம் காக்கவேண்டிய தேவை என்ன.?

பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்று சொல்ல திராணியற்று, நாயை அவிழ்த்து விட்டாலும் பரவாயில்லை பிச்சையே வேண்டும் என்பதனால் கடிக்கும் வரை காத்திருந்தாரா?

இறுதியாக நேரத்திற்கு சமூகமளிப்பது குறித்த கவிஞர் கண்ணதாசனின் கருத்துதொன்று. கவிஞர் கண்ணதாசனின் மிகப்பெரிய பலவீனம் குறித்த நேரத்திற்கு சமூகமளிப்பதில்லை. தூக்கத்திற்கு கும்பகர்னன் கவிஞர். இந்தியாவில் இந்துமதம், இஸ்லாம் மதம், கிறிஸ்தவ மதங்கள் உண்டு. ஆனால் என் மதம் தாமதம்! என்றார். கவிஞர் கண்ணதாசன். நன்றி- அரங்கம் இணையம்

# கொழும்பில் நினைவு கூரப்பட்ட திருமலை மாணவர்கள் படுகொலை

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
– பார்த்தீபன் –

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்த் தரப்பினருக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமான முதல் நாளிலேயே ஸ்தம்பிதமடைந்திருக்கும் நிலையில் பொறுப்புக்கூறல் குறித்த கோரிக்கைகளும் வலுவடைந்திருக்கின்றது. கடந்த வாரம் கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றிலும் இந்த பொறுப்புக் கூறல் என்ற விவகாரம் முக்கியமாகப் பேசப்பட்டிருக்கின்றது. அதனை விட கொழும்பில் வைத்தே இராணுவம் தான் குற்றவாளிகள் என்ற கருத்து பகிரங்கமாக முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இது நிலைமைகள் மாற்றமடைந்து வருகின்றதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

திருமலையில் 2006 ஜனவரி 02 ஆம் திகதி கொல்லப்பட்ட ஐந்து மாணவர்கள் தான் கடந்த வாரம் கொழும்பில் நினைவு கூரப்பட்டிருக்கின்றார்கள். கொழும்பு மருதானையில் உள்ள மண்டபம் ஒன்றில் இந்த நிகழ்வு பகிரங்கமாக இடம் பெற்றது. சிங்களவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த நினைவு கூரலில் உரையாற்றிய அரகலய என்ற இளைஞர் கிளர்ச்சியின் செயற்பாட்டாளர்களில் ஒருவரான ராஜ்குமார் ரஜிவ் காந்த் 16 வருடங்களாக தனது மனதிலே அழுத்திக் கொண்டிருந்த உண்மைகளை அம்பலப்படுத்தி இருக்கின்றார். அவர் சொன்ன விடயங்கள் சிங்கள மக்களின் மனச்சாட்சியையும் தொட்டிருக்கின்றது.

பொறுப்பு கூறல் இல்லாமல் இலங்கையிலே கட்டி எழுப்பப்படுகின்ற எதுவுமே நிலைக்காது என்ற விடயத்தை அவர் அங்கு உறுதியாகக் கூறிய அதே வேளையில்இி இந்தப் படுகொலைகளுக்கு இராணுவம் தான் காரணம் என்பதையும் துணிச்சலாகத் தெரிவித்திருக்கின்றார் எந்தவொரு காரணமும் இல்லாமல் கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தை முடித்து விட்டு பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கு காத்திருந்த மாணவர்களே இவ்வாறு திருமலை கடற்கரையில் வைத்து கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

திருமலை கடற்கரையிலிருந்து அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது அந்தப் பகுதியை திடீரென சுற்றி வளைத்த விஷேட அதிரடிப் படையினர் அவர்களின் தலைகளில் துப்பாக்கியை வைத்து சுட்டுக்கொன்றார்கள். ஐந்து மாணவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட இரண்டு மாணவர்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக ˙கொண்டிருந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டனர். இந்த சம்பவங்களின் சாட்சியாக இருப்பவர்களில் ஒருவர் தான் ராஜ்குமார் ரஜிவ்காந்த். இந்த சம்பவம் குறித்து அவர் இவ்வாறு விபரிக்கின்றார்.

திருமலை கடற்கரையில் ஒரு காந்தி சிலை இருக்கின்றது. அதற்கு அருகில் ஒரு கட்டு இருக்கின்றது. அதில் தான் இந்த ஏழு பேரும் அமர்ந்திருந்தார்கள். அந்த நேரம் நீல நிற முச்சக்கர வாகனம் ஒன்றில் வந்த ஒருவர் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றை அந்த இடத்தில் நடத்தினார். அப்போது மக்கள் அனைவரும் சிதறி ஓடினார்கள். இந்த மாணவர்களுக்கு அந்த கைக்குண்டு தாக்குதலில் சிறு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டது. கடற்கரையிலிருந்து சிறிது தொலைவில் உள்ள எனது மாமாவின் வீட்டில் அப்போது நான் நின்றேன். இந்த சத்தம் எனக்கும் கேட்டது. ஏதோ நடந்து விட்டது என்பது மட்டும் தெரிந்தது.

டாக்டர் மனோகரன் அப்போது இந்த சத்தத்தையடுத்து அவரது மகன் ரஜீகனுக்கு தொலைபேசி எடுத்திருக்கின்றார். பதில் இருக்கவில்லை. அதனால் அவர் கடற்கரையை நோக்கி சென்றரர் அப்போது கடற்கரைப் பகுதி மின் விளக்குகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு கடற்கரைப் பகுதிக்குச்



செல்வதை கடற்படையினர் தடுத்தார்கள். மாணவர்கள் தம்மைக் காப்பாற்றுமாறு குரல் எழுப்பிக் கொண்டிருந்ததை டாக்டர் மனோகரனால் கேட்க முடிந்தது. அதன்பின்னர் அவர் உள்ளே செல்ல முயன்ற போதும் படையினர் அவர் உள்ளே செல்வதை அனுமதிக்கவில்லை.

இரவு 8.00 மணியளவில் திருமலை வைத்தியசாலையில் ஐந்து சடலங்கள் வைக்கப்பட்டிருப்பதான தகவல் திருமலை முழுவதும் பரவியது. அங்கும் இராணுவம் பொலிஸ் குவிக்கப்பட்டிருந்தது. அந்த சடலங்களைக் கையளிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டது. கொல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என எழுதி கையொப்பமிட்டுத் தந்தால் மட்டுமே பிரேதங்களைக் கையளிப்போம் என படையினர் உறுதியாகக் கூறினார்கள். இந்த மாணவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவர்கள் திருமலை இந்துக் கல்லூரியில் படித்து உயர்கல்விக்காக காத்திருந்தவர்கள்.

அதனால் நாம் படையினரின் கோரிக்கைக்கு எமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். எக்காரணம் கொண்டும் அவ்வாறு கையெழுத்து வைத்து கொடுக்கமாட்டோம் என்பதை உறுதியாகத் தெரிவித்தோம். இதனால் அரசாங்கத்துக்கும் தெரிந்தது இது தமது மாபெரும் தவறு என்பது. அதனால் இராணுவம் அகற்றப்பட்டது. ஆனால் இன்றுவரையில் இதற்கான நீதி கிடைக்கவில்லை என்று ராஜ்குமார் ரஜிவ்காந்த் கொழும்பில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயங்களுடன் தப்பிய இருவரும் நேரில் பார்த்த பலரும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் தெரியும் இதனை நடத்தியது இராணுவம் தான் என்பது. அத்துடன் மாணவர்கள் மிகவும் நெருக்கமாக தலையில் சுடப்பட்டார்கள் என்பதற்கு ஊடகவியலாளர் சுகிர்தராஜன் எடுத்த புகைப்படங்களும் ஆதாரமாக சாட்சியாக இருக்கின்றது. இந்த புகைப்படங்களை எடுத்த சுகிர்தராஜன் இரண்டு தினங்களில் அவரது வீட்டு வாசலிலேயே வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது கொடூரத்தின் உச்சம்.

திருமலை கடற்கரையில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக அரசாங்கம் சொன்னது இது தான். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சிலர் படையினரை நோக்கி கைக்குண்டுத் தாக்குதலை நடத்த முயன்றார்கள். அது அவர்களுக்குள்ளேயே தவறுதலாக வெடித்ததால் அவர்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள் இவ்வாறு அரசாங்கம் செய்தி வெளியிட்டது. கைக்குண்டு வெடித்தால் அவர்களது உடல்களில் காயங்கள் எவ்வாறு இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் தலையில் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதை தனது புகைப் படங்கள் மூலமாக அம்பலப்படுத்த முற்பட்டமையால் தான் சுகிர்தராஜன் அதற்காக தனது உயிரை விலையாகக் கொடுத்தார்.

இவ்வாறு தமிழ் இளைஞர்களைக் கொலை செய்வதும் பின்னர் அவ்வாறு இடம் பெற்ற கொலைகளை அவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கூறி ஏதோவொரு வகையில் நியாயப்படுத்துவதும் போர்க் காலத்தில் சகஜமாக இடம் பெற்றது. இதற்கு எதிராகக் குரல்கொடுப்பவர்கள் அல்லது நீதிக்காகப் போராடுபவர்களை புலிகளின் ஆதரவாளர்களாக சித்தரிப்பதும் ஆட்சியாளர்களின் உபாயமாக இருந்து வந்திருக்கின்றது. அதனால் தான் பலர் மௌனித்தார்கள்.

திருமலையில் கொல்லப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் உறவினர்கள் நீதி கோரி நீதிமன்றம் சென்றார்கள். அவர்கள் அனைவருக்குமே உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனால் அவர்கள் தமது வழக்குகளைக் கைவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் தந்தையான டாக்டர் மனோகரன் இந்தப் பிரச்சினையை ஜெனிவா வரையில் கொண்டு சென்றார். அவரது விடாமுயற்சியால் தான் இந்தப் பிரச்சினை சா◌வதேச அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச அழுத்தங்கள் டாக்டர் மனோகரன் முன்னெடுத்த போராட்டம் என்பன காரணமாக விஷேட அதிரடிப் படையைச் சேர்ந்த 12 பேரை அரசாங்கம் கைது செய்தது. இது வெளிநாட்டு அடுத்தம் காரணமாகச் செய்யப்பட்ட ஒரு நாடகம். சில மாதங்களில் கைதானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் பின்னர் போதிய சாட்சியம் இல்லை எனக் கூறப்பட்டு அவர்கள் அனைவருமே விடுவிக்கப்பட்டு விட்டனர்

இலங்கையில் போதிய சாட்சியம் இல்லை எனக் கூறப்பட்டு கைதான படையினர் விடுதலை செய்யப்படுவது இதுதான் முதன் முறையல்ல. குமாரபுரம் படுகொலை வழக்கிலும் இது தான் நடந்தது. ஆக மிக மோசமான படுகொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். சட்டத்தின் பிடியிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான படையினரை சிங்கள மக்கள் யுத்த வீரர்களாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் தான் பொறுப்புக்கூறல் தொடர்பாக கொழும்பில் இடம் பெற்ற நினைவுக்கூட்டத்தில் உரையாற்றிய ராஜ்குமார் ரஜிவ்காந்த் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

கோட்டா கோ ஹோம் என்ற கோஷத்துடன் தென்னிலங்கையில் வெடித்த இளைஞர் கிளர்ச்சி முழுமையாக வெற்றிபெற்றதா இல்லையா என்ற விவாதங்கள் ஒரு புறத்தில் இடம் பெற்றுக் கொண்டிருந்தாலும் சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பலவற்றை அது ஏற்படுத்திச் சென்றிருக்கின்றது. குறிப்பாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் இராணுவத்தினரால் தமிழ் மக்களுக்கு இளைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து பேசக்கூடிய ஒரு வெளியை தென்னிலங்கையில் இது உருவாகியிருக்கின்றது.

அரகலய போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே காலிமுகத் திடலில் யாழ். நூலகம் எரிப்பு நினைவு கூரப்பட்டது. முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைகள் தமிழ் ஊடகவியலாளர் படுகொலைகள் என்பன நினைவு கூரப்பட்டன. இவற்றின் மூலம் தமிழ் மக்களுக்கு இளைக்கப்பட்ட அநீதிகள் சிங்கள மக்களும் புரிந்து கொள்ளும் நிலை ஓரளவுக்கு ஏற்பட்டது.

அந்த வகையில் திருமலையில் இடம் பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைகள் கொழும்பு மருதானையிலுள்ள பொது மண்டபம் ஒன்றில் நடைபெற்ற போது ராஜ்குமார் ரஜீவ் காந்த நிகழ்த்திய உரை பொறுப்புறலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இருந்தது.

அவரது உரை சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. திருமலையைச் சேர்ந்தவரான ரஜீவ்காந்த தனக்கு அங்கு கிடைத்த அனுபவங்களை வெளிப்படுத்திய போது கூட்டத்தில் பங்கேற்றிருந்த சிங்கள மக்களும் ஆச்சரியத்துடன் அவற்றை செவிமடுத்தார்கள்.

சிங்கள மக்களில் ஒரு தரப்பினரிடம் மன மாற்றம் உருவாகி வருவதை இவை உணர்த்துகின்றன. இவர்கள் மத்திய தரப்பினராகவும் படித்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இருந்த போதிலும் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதற்கான செயன் முறைகளை முன்னெடுக்கும் போது சிங்கள இனவாதிகளின் குரலை அடக்குவதற்கான உறுதிப்பாட்டை இவர்கள் கொண்டிருப்பார்களா?

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“இசைச் சங்கமம் 2023”

# தமிழ்த் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



அரசியல் என்பது இயங்குநிலையாகும். அந்த இயங்குநிலை வெற்றியையும் தரலாம். தோல்வியையும் தரலாம். தோல்விகள் ஏற்படுகின்ற போது, அது அனுபவமாகின்றது. இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, பல பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் எதுவுமே வெற்றியில் முடியவில்லை. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியின் காலம் தோல்வி. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலம் தோல்வி, ஐந்து இயக்கங்களின் காலம் தோல்வி. விடுதலைப் புலிகளின் காலம் தோல்வி. இது சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காலம். இதுவரையில் சம்பந்தனால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்விலேயே முடிந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தான், மீண்டுமொரு பேச்சுவார்த்தை தொடர்பில் பேசப்படுகின்றது.

கடந்த கால பேச்சுவார்த்தைகளை ஆழமாக எடுத்து நோக்கினால், ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, சிங்களவர்களோடு உள்நாட்டுக்குள் இடம் பெற்ற முயற்சிகள் அனைத்துமே தோல்வியில் தான் முடிந்திருக்கின்றது. வெளிநாட்டு தரப்புக்களின் தலையீட்டோடு இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் கணிசமான தூரம் சென்றிருக்கின்றது. இதில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மட்டுமே ஒரு தீர்வில் முடிவுற்றது. அது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட அப்பிராயங்கள் இருந்த போதிலும் கூட, கடந்த 73 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நகர்வுகளுக்கு மத்தியில், நீடித்து நிலைக்கும் விடயமென்றால், அது இந்திய-இலங்கை ஒப்பத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமை ஒன்றைத்தான் கூறமுடியும்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தை ஒரு கணிசமான தூரம் சென்றிருந்த போதும், பேச்சுவார்த்தையில் நிர்பந்தத்தை பிரயோகிக்கக் கூடிய நிலையில், நோர்வே இருந்திருக்கவில்லை. நோர்வே ஒரு வெறும் மத்தியஸ்தர் மட்டுமே! இந்த இரண்டு சந்தர்ப்பங்களை தவிர, அனைத்து முயற்சிகளும் ஏமாற்றங்களுடன் தான் முடிவுற்றிருந்தது. இதன் மூலம் கிடைக்கும் படிப்பினை என்ன? சிங்கள தரப்புக்களோடு பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற போது, நிர்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய பலம் தமிழர் பக்கத்திலிருக்க வேண்டும். ஒன்றில் சொந்த பலமிருக்க வேண்டும் அல்லது வெளியாரின் ஆதரவிருக்க வேண்டும். செல்நாயகம் தலைமையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, ஒப்பீட்டடிப்படையில் மக்களை அணி திரட்டிப் போராடக் கூடிய ஆற்றுலுடன் தான் தமிழரசு கட்சியிருந்தது. ஆனால் அவ்வாறான போராட்டங்களை தென்னிலங்கை கருத்தில் கொள்ளவில்லை.



ஏனெனில் தென்னிலங்கைக்கு நெருக்கடி கொடுக்கக் கூடியதாக அவைகள் இருந்திருக்கவில்லை. இவ்வாறானதாரு பின்புலத்தில் தான் செல்வநாயகம் பிராந்திய அரசியல் சூழலால் ஏதும் விமோசனங்கள் ஏற்படாலாமென்று நம்பி, தனிநாட்டு கோரிக்கை தொடர்பில் சிந்தித்தார். தனிநாட்டு கோரிக்கையென்பது சொந்த பலத்திலிருந்து எழுந்த கோரிக்கையல்ல. பிரபாகரன் தான் அதனை சொந்த பலத்தோடு தொடர்புபடுத்தினார். ஆனால் செல்வநாயகம் எதிர்பார்த்த பிராந்திய அரசியல் சூழல் பிற்காலத்தில் தான் கனிந்தது. இந்தியத் தலையீட்டின் போது, இந்தியா முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறைகளை பிரயோகித்திருந்தது. இந்தியாவின் தலையீடு அடிப்படையிலேயே, கொழும்மை கட்டுப்படுத்துவதாக இருந்தது. இராணுவ ரீதியான தலையீட்டுக்கு முன்னர், தமிழ் ஆயுத இயக்கங்களின் படைவலுவை அதிகரித்தது. ஒரே நேரத்தில் இரண்டு வகையான இராணுவ தலையீடுகளை மேற்கொண்டது.

தமிழ் ஆயுத இயங்களை பயிற்சியளித்து ஊக்குவித்தது, பின்னர், அதனையடிப்படையாகக் கொண்டு, அமைதிக்கான இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது. இந்த இரண்டு அணுமுறைகளின் விளைவாக வந்ததே, இந்திய-இலங்கை ஒப்பந்தமும், 13வது திருத்தச் சட்டத்தினடிப்படையிலான மாகாண சபை முறைமையுமாகும். இந்திய இலங்கை ஒப்பந்தமும் மாகாண சபை முறைமையும் பின்னிப்பிணைந்திருக்கின்றது. இதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின், இந்தியாவின் அனுமதி தேவை. ஏனெனில் இது இரண்டு நாடுளுக்கிடையிலான ஒப்பந்தம். இரண்டு சிறிய நாடுகளுக்கிடையிலான அல்லது ஒரு பெரிய நாட்டுக்கும் சிறிய நாடுகளுக்குமிடையிலான உடன்பாட்டை பெரிய நாடு மீறுகின்ற போது, சிறியநாடுகள், சர்வதேச நீதிமன்றத்தை நாடும். ஆனால் இந்தியா போன்றதொரு நாடு எவ்வாறு விடயங்களை கையாளுமென்பதை, கொழும்பு நன்கறியும். இதன் காரணமாகவே ஏதோவொரு வகையில், மாகாண சபை முறைமையை விரும்பியோ, விரும்பாமலோ கொழும்பின் ஆளும்தரப்புக்கள் பாதுகாத்தே வந்திருக்கின்றன.

ஆனால் தமிழ் அரசியல் கட்சிகள், அதனை பயன்படுத்துவதில் அக்கறையற்றிருந்தமையால் அல்லது அதற்கப்பால் செல்வது தொடர்பிலும், சமஸ்டி பற்றியும் பேசி வந்ததாலும், 13லுள்ள விடயங்களை பலவீனப்படுத்தும், நகர்வுகளையே கொழும்பு இதுவரையில் முன்னெடுத்து வந்திருக்கின்றது. தமிழ் அரசியல் தலைமைகள் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தாத நிலையில், இந்தியாவும், தமிழர்களின் பேரால் தலையீடு செய்கின்ற நிலையிலிருந்து விலகியிருந்தது.

இராஜதந்திர அணுகுமுறையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மீதான உரித்தை நினைவுபடுத்தும் வகையில் அவ்வப்போது 13வது திருத்தச் சட்டத்தை உச்சரித்துக் கொண்டது. ஏனெனில் தேவையுள்ள தமிழர்கள் அதனை கையாளுவதற்கு அல்லது அதிலிருந்து முன்நோக்கி செல்வதற்கு முயற்சிகளை செய்யாத நிலையில், இந்தியா அதில் தலையீடு செய்வதற்கான எந்தவொரு சந்தர்ப்பமுமில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.ஜெயசங்கர், கூட்டமைப்பினுடனான சந்திப்பின் போது, ஒரு விடயத்தை தெளிவாக கூறியிருந்தார். 13வது திருத்தச்சட்டத்தினடிப்படையில் இந்தியா அப்பிராயங்களை கூறும், தலையீடுகளை செய்யும்



ஆனால் சமஸ்டிப்படையிலான அரசியல் விடயமென்றால் அதனை நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். சமஸ்டியப்படையிலான அரசியல் ஏற்பாடொன்றிற்கு அரசாங்கம் இணங்கினால் அதில் எவருக்கும் பிரச்சினையில்லை ஆனால், அதனை நீங்கள் அரசாங்கத்துடன் மட்டும் தான் பேச வேண்டுமென்பது தான் அதன் பொருள். இங்குள்ள பிரச்சினை அரசாங்கத்துடன் பேசி, அவ்வாறானதொரு அரசியல் தீர்வை அடைய முடியாது. இவ்வாறானதொரு நிலையில்தான் சமஸ்டியை இலக்காக வைத்திருந்தாலும் கூட, தற்போதிருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது. இல்லை இதனை நாங்கள் பயன்படுத்தப் போவதில்லை. தாண்டிச் செல்லப் போகின்றோமென்றால், அவ்வாறு கூறுவதில் தவறில்லை ஆனால் அதனை கூறிக் கொண்டு மட்டும் இருப்பதால் எதுவும் அசையாது. தாங்கள் விரும்புகின்றவாறு அரசியல் அசைய வேண்டுமென்று எண்ணுபவர்கள், முதலில் தாங்கள் அசைய வேண்டும். ஆதன் பின்னரே மக்களை அசைக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் அதற்கான அரசியல் ஆளுமைகள் எவருமே தமிழ்ச் சூழலில் இல்லை. ஆகக் குறைந்தது, அமிர்தலிங்கம் போன்ற ஒரு மிதவாத தலைவர் கூட இன்றில்லை. மேலும் தமிழ் மக்களும் இவ்வாறான அரசியல் பரிசோதணை முயற்சிகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு நண்பர் கூறினார். ஒரு கப்பலை அனுப்பி, விரும்பியவர்கள் அனைவரும் ஏறுங்கள், பாதுகாப்பாக ஐரோப்பில் கொண்டு சேர்க்கின்றோமென்றால், இங்கு எவருமே இருக்கப் போவதில்லை. பிரச்சினை ஒரு கப்பல் போதாதென்பது மட்டும் தான். மக்களை பொறுத்தவரையில் சமஸ்டி பற்றியோ, ஏன் 13வது திருத்தம் தொடர்பிலோ சிந்திக்கும் நிலையிலில்லை.



நாங்கள் பொதுவாக மக்களென்று கூறிக் கொண்டாலும் கூட, தமிழ் தேசிய அரசியலால் பஞ்சப்பராரிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றித்தான் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். மக்களை நாங்கள் தொடர்ந்தும் அரிசிக்கும் பருப்புக்கும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொண்டு, இலட்சிய வாதங்கள் தொடர்பில் பேசுவதில் பயனில்லை. இறுதியில் சீனாவும் தமிழ் மக்களுக்கு அரிசி வழங்குகின்றது. அரிசி வழங்குவதன் மூலம், வடக்கு கிழக்கில் காலூன்றலாமென்று சீனா கருதுகின்றளவிற்கு, நிலைமைகள் மாறியிருக்கின்றன.தமிழ் மக்களின் நிலைமை கையேந்தி நிலைக்கு தாழ்ந்திருக்கின்றது. இதில் என்ன பெருமையுண்டு?

இந்த நிலைமையை போக்கும் வகையில், தமிழ் தேசிய தரப்புக்கள் செயலாற்றவில்லையாயின், தமிழ் தேசியமென்பது, வெறுமனே சிலர் உச்சரிக்கும் விடயமாகி விடும். இந்தக் கட்டுரையாளர் சில வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டது போன்று, இறுதியில் தமிழ் தேசியமென்பது, அமெரிக்காவில் கம்யூனிசம் பேசுவது போன்றாகி விடும். அமெரிக்காவில் கம்யூனிசம் பேசினால், அதனை அமெரிக்க ஆளும் வர்க்கம் பெரிதாக பொருட்படுத்தாது. தாராளமா பேசலாம் ஏனெனில் அவ்வாறு பேசும் எவருமே, செயலுக்குச் செல்லும் வல்லமையில்லையில்லாதவர்கள். அமெரிக்க மக்கள் அவ்வாறான கம்யூனிச கதையை நகைச்சுவையாக கடந்து விடுவர். செயலுக்கு செல்லாத கருத்தியல்கள், நிலைப்பாடுகள் தொடர்பில் ஆளும் வர்க்கம் அலட்டிக் கொள்வதில்லை. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கூட, கொழும்பிலிருந்து தமிழ் தேசியம் பேசியவர்கள் இருந்தனர். ஊடகங்களில் அவ்வாறானவர்கள் இருந்தனர். (16ம் பக்கம் பார்க்க)

# சீனாவை ஈழத்தமிழர்கள் அணுகுவது அவசியமானதா?



**கட்டுரையாளர்**
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



இலங்கை. அரசியல் வல்லரசுகளது விளையாட்டுத் திடலாக மாறி நீண்ட காலமாகியுள்ளது. ஆரம்பத்தில் இருந்த வல்லரசுகளை விட தற்போது சீனா அமெரிக்கா மற்றும் இந்தியாவின் களமாக மாறியுள்ள போதும் சீனாவே அதிக செல்வாக்குச் செலுத்தி வருகிறது.

2005களுக்குப் பின்னர் தென்னிலங்கையுடன் தனது நலன்களை அடைந்த சீனா தற்போது வடக்கு, கிழக்கிலும் தனது செல்வாக்கினை வலுப்படுத்தி வருகிறது. அல்லது அதற்கான உபாயங்களை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. குறிப்பாக 28.12.2022இல் மன்னாரில் விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டியதுடன், பொருளாதார அடிப்படையில் உணவுப் பொதிகளையும் வழங்கியிருந்தது. அது மட்டுமன்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாணவர்களுக்கான உதவிகளையும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உணவுப் பொதிகளையும் வழங்கியுள்ளது. இலங்கைக்கான சீன துணைத் தூதுவர் ஹிவெய் வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டு வட மாகாணத்துடன் நெருக்கமான உறவை ஏற்படுத்த முயன்றுள்ளார். கடந்த வாரம் இதே பகுதியில் சீனா மீதான ஈழத்தமிழரது மனோநிலை எதுவென்பதை அவதானித்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். இக்கட்டுரையும் ஈழத்தமிழரது கட்சி அரசியலைக் கடந்து தேசமாகவும் தேசியமாகவும் சீனாவை அணுகுவதை பற்றியதாகவே அமையவுள்ளது.

ஈழத்தமிழரது அரசியல் கட்சிகளும் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களும் உயர் கல்வி நிறுவனங்களும் ஊடகங்களும் சீனா மீதான அதீத எச்சரிக்கையையும் விமர்சனங்களையும் வெளிப்



படுத்தி வருகின்றன. சீனாவின் தேசியங்கள் பற்றிய அணுகுமுறைகளையும் தேசிய விடுதலைப் போராட்டத்தை கையாளும் முறைமைகளையும் மையப்படுத்தியே அத்தகைய விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன.

சீனாவின் சோசலிஸம் பற்றிய எண்ணங்கள் மீது அதிக அதிருப்தி ஈழத் தமிழர் மத்தியில் உண்டு. அதனால் சீனாவையும் அது அடைந்துள்ள வளர்ச்சி நிலையையும் கருத்தில் கொள்ளாது செயல்பட முடியுமா என்பது முக்கியமானது. அது மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் சீனாவின் பலத்தை கருத்தில் எடுக்காது சீனாவை நிராகரிக்க முடியுமா என்ற கேள்வி நியாயமானதாகவே தெரிகிறது.

அதனை ஆழமாகத் தேடுதல் வேண்டும். முதலாவது, சீனா உலகளாவிய வல்லரசு என்ற நிலையை நோக்கி கணிசமான அடைவை எட்டியுள்ளது. அமெரிக்கா எதிர் சீனா எனும் நிலை மட்டுமன்றி மீண்டும் ஒரு பனிப் போர் நிகழுமாயின் அது சீனா எதிர் அமெரிக்காவாகவே இருக்க வாய்ப்புள்ளது.

இரு தரப்பின் அரசியல் - பொருளாதார பலம் மட்டுமன்றி இராணுவ வலுவும் அவ் வாறானதொன்றாகவே அமைந்துள்ளது. சீனாவின் பொருளாதார வலு இராணுவ வலுவை ஊக்குவிப்பதுடன், எதிர்கால இராணுவ நிலையினை அடைய உதவும். பொருளாதார ரீதியில் முதல் நிலையில் அமெரிக்காவும் அடுத்த நிலையில் சீனாவும் அமைந்திருப்பது வலுவான இராணுவச் சம நிலைக்கு அடிப்படையாகவே தெரிகிறது. அமெரிக்காவுக்கு நிகராக இராணுவ கடற் படை வலு சீனாவிடம் இல்லாது விட்டாலும் அதனை அடைவதற்காக போட்டியிடும் அரசாக சீனாவின் பாதுகாப்புச் செலவீனம் காணப்படுகிறது. எனவே அடுத்து வரும் தசாப்தங்கள் சீனாவின் செல்வாக்கும் அரசியல் பரம்பலும் விஸ்தரிக்கப் போகின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இரண்டாவது, சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கான நகர்வுகள் அதி தீவிரமாக உலகளாவிய மட்டத்தில் வளர்ந்து வருகிறது. பட்டி மற்றும் பாதை முன் முயற்சிகன் கடல்களையும் துறைமுகங்களையும் கண்டங்களையும் இணைக்கும் முன்முயற்சியாக நெரிகிறது. நாடுகளை மையப்படுத்திய சர்வதே உறவில் புதிய பரிமாணத்தை சீனா வடிவமைத்து வருகிறது.

பழைய பட்டுப் பாதைக்குப் பதிலாக புதிய பட்டுப் பாதையை உருவாக்கிவரும் சீனா, உலகத்தை வர்த்தகத்தால் இணைத்துள்ளது. ஆனால் எதிர் காலத்தில் இராணுவ பலமுடைய வர்த்தக சந்தைக் கட்டமைப்பைக் கொண்ட பெரு வல்லரசாக மாற்றமடையும் திறன் கொண்டதாக விளங்கும் என்ற மதிப்பீடு மேற்குலக ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்படுகின்றது.

மூன்றாவது, இந்து சமுத்திரம் சீனாவின் செல்வாக்குச் செலுத்தும் கடலாகவும் அதுவே அதன் திறவு கோல் கடலாகவும் அமைய உள்ளது. பசுபிக் சமுத்திரம் சீனா வின் தளமாகவும் அதாவது பின் தளமாகவும் அதன் வளர்ச்சிக்கும் சுதந்திரமான விரி வாக்கத்திற்கும் இந்து சமுத்திரமே அடிப்படையானதாக அமையவுள்ளது. அதற்கான நகர்வுகளாகவே இந்து சமுத்திர நாடுகளில் சீனாவின் துறைமுகங்கள் கட்டப்பட்டு வருவதுடன், பிற வல்லரசுகள் நுழையாதவாறு இந்து சமுத்திரத்தை கட்டி வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனம் கொண்டு வருகிறது. கடல்களே எதிராக நாடுகள் மற்றும் மண் உங்களுக்கு இடையிலான உறவுகளுக்கான மையங்களாகும். வர்த்தகம் கடலாலும் கடல் சார்ந்த இலக்குகளாலும் கை மாற்றப்படும் நிலை தற்போது வளர்ந்துள்ளது. அது எதிர் காலத்திலும் வலுவடைய வாய்ப்புள்ளது. சந்தையும் வர்த்தகமுமே பொருளாதாரம் என்ற நிலை வளர்ச்சியடைந்துள்ளது. இதுவே 21ஆம் நூற்றாண்டின் உலகப் பொருளாதாரமாகும். அதற்கு தலைமை தாங்குவதிலேயே சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமான போட்டியாகும். அதனை முழுமைப்படுத்தும் நகர்வுகளே இந்து சமுத்திரத்திலும் பசுபிக் சமுத்திரத்திலும் இரு நாடுகளாலும் அரங்கேற்றப்படுகிறது.

ஏறக்குறைய சீனா இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வலுவான நிலையை எட்டியுள்ளது. அமெரிக்காவின் கூட்டு பலம் அதனை முறியடிக்க தயாராகி வருகிறதே அன்றி சீனாவை தோற்கடிக்க முடியவில்லை. ஆனால் மேற்குலகம் ஒரு போட்டிக்கு போகுமே அன்றி முழுமையாக முன்னாள் சோவியத் யூ னியன் போன்று விட்டுக் கொடுத்து விடாது. அல்லது முற்றாக தோல்வியடைந்து விடாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

நான்காவது, இந்தியா-சீனா போட்டி என்பது கருத்தில் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. காரணம் இந்தியா சீனாவுடன் போட்டியிடக் கூடிய சக்தியாக இல்லை என்பதை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

ஏறக்குறைய இந்தியா சீனாவை விட 20 மடங்கு அல்லது வளர்ச்சி நிலையில் 20 வருடங்கள் பின்தள்ளப்பட்டுள்ளது என்ற முடிவை முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தனது நூல்களில் ஒன்றான இருபர்க்கு இருபது- இந்தியா' என்பதில் குறிப்பிட்டுள்ளார். அந்த நிலை என்றுமே மாறவில்லை. இந்திய பொருளாதாரமாக எழுச்சியடைந்திருக்கலாம்.

ஆனால் சமூக உறுதிப்பாடாக, ஒரு பல்தேசிய தேசமாக, தேசிய பிரக்ஞை பூர்வமான அரசாக எழுச்சி பெறவில்லை. சமூக இடைவெளியென்பது மீட்டெடுக்க முடியாத நிலையில் உள்ளது. அவ்வாறே, அரசியலும் சட்ட ஒழுங்கும் ஜனநாயகமும் காணப்படுகிறது. மக்களே தேசிய அதிகாரத்தின் பிரதான பலமாகும். அதனை இந்தியாவில் காணவே முடியாதுள்ளது. நடுநிலைமை எனும் போலித் தனத்தால் அல்லது கொள்கையால் இந்திய தேசம் தனது அரசியல் முழுமையை இழந்துள்ளது. இந்தியா நவீனத்துவத்தையோ பின் நவீன சிந்தனையையோ முழுமையாக உள்வாங்கவும் இல்லை. அதனை பின்பற்றக்கூடிய திறனும் வளர்ச்சியடையவில்லை. அங்கொன்று இங்கொன்றாக உச்சரிக்கலாமே அன்றி இந்தியாவாக உருவாகவில்லை.

எல்லாமே அரைகுறையானது. இந்தியா விடமிருந்து பிரிக்க முடியாதது ஊழலாகும். இது சீனாவிடம் இல்லை என்பதல்ல. ஆனால் சீனா கட்டுப்படுத்தி விட்டது. சீனாவை விட இந்தியா சுதந்திரமானதும் தனிமனிதனின் இருப்பு முதன்மையானதுமான நாடாகும். ஆனால் தேசமாகவோ தேசியமாகவோ இந்தியா கட்டமைக்கப்படவில்லை. சாதியமாகவே அல்லது வர்ணமாகவே இந்தியா வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவே அறிவியலிலும் விஞ்ஞானத்திலும் விளையாட்டிலும் சினிமாவிலும் ஊறிப் போயுள்ளது.

இனமாக, மொழியாக, மதமாக சிந்திப்பவர்களும் சிந்தனைகளுமே இந்தியாவை ஆள்படுத்தியுள்ளது. கற்பனைகளுக்கே அதிக முக்கியத்துவம் இந்தியா கொடுத்துள்ளதே அன்றி யதார்த்தத்தை (*Myth and Reality*) ஒரு போதும் கொண்டிருக்காத நாடாக உள்ளது.

இவற்றை எல்லாம் ஒற்றை வரியில் சீனா கடந்துள்ளது. அதனால் சீனாவுடன் இந்தியாவை போட்டியரசாகவோ சமமான அரசாகவோ கருதி ஒப்பீடு செய்ய முடியாது. ஐக்கிய நாடுகளது வலுவான பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ள சீனா, உலகளாவிய ஆதிக்கத்தை ஒரு வீட்டோவால் நிரப்பீடு செய்துவிடும் வலிமையுடன் இருக்கும் நாடாகும். ஐந்தாவது, இத்தகைய புறச்சூழல் அமெரிக்க-இந்தியக் கூட்டின் முக்கியத்துவத்தை இலங்கைத்தீவில் சீனாவுக்கு எதிரானதாக விபரணப்படுத்துகிறது. இந்திய - சீன மோதல் மட்டுமல்ல அமெரிக்க- சீன மோதலும் முதன்மையானதாக விபரிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய விபரிப்பில் இந்திய-ரஷ்ய உறவும் ரஷ்ய - சீன உறவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உக்ரைன் போருக்குப் பின்னரான ரஷ்ய-இந்திய-சீன கூட்டு வலுவானதாகவே தெரிகிறது.

இதற்கு ஆதாரமாக அதாவது இந்தியா சீனாவுடன் ஒத்துழைக்காது விட்டாலும் அரசியல் முகாமை செய்ய முயல்கிறதென்பதை உணர முடிகிறது. ஏனெனில் உலகம் ஒரு புதிய யுகத்திற்குள் நகர்கிறது. அதாவது உலகளாவிய அரசியல் முகாமை யுகமாக மாறி வருகிறது (*Global Political Management Era*). இதற்கு ஆதாரமாக ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளுதல் சிறப்பானதாக அமையும். சீனாவுடன் இந்திய எல்லையில் குலித்துள்ள இராணுவத்தைக் கொண்டு தள்ளு முள்ளுப்படுகிறதே அன்றி ஒரு போரை 1962க்குப் பின்னர் பாரியளவில் மேற் கொள்ளவில்லை.

சீனாவால் 1962இல் இந்தியாவின் நிலப்பரப்பில் கைப்பற்றப் பட்ட பகுதியை இன்னுமே மீட்கவில்லை என்ற விமர்சனமும் உண்டு. ஆனால் ஈழத் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் சீனாவுக்கு எதிராக அறிக்கையிடும் போதும் விமர்சனம் செய்யும் போதும் இந்தியா சீனாவின் எதிரி நாடு என்றெல்லாம் குறிப்பிட முயல்கிறார்கள். இரு நாட்டுக்குமான வர்த்தகம் ஆரோக்கியமான தாகவே உள்ளது. தற்போது ஷங்ஹாய் கூட்டமைப்பின் தலைமையும் இந்தியாவிடமே உண்டு. பிரிக்ஸ்நாடுகளின் கூட்டுக்குள் இந்தியா பிரதான அங்கத்துவ (22ம் பக்கம் பார்க்க)

# தலாய்லாமாவினால் வரமுடியுமா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



டிசம்பர் இறுதி வாரத்தில் புத்தகாய வுக்குப் பயணம் மேற் கொண்டிருந்த இலங்கையின் பௌத்த பிக்குகள் குழு வொன்று, திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவை இலங்கைக்கு வரு மாறு அழைப்பு விடுத்திருக்கிறது.

ராமன்ய மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் மாகுல் வெவ விமல மகாநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களைச் சேர்ந்த பௌத்த பிக்கு கள், கடந்த 27ஆம் திகதி புத்தகாய வில் தலாய்லாமாவைச் சந்தித்திருந்த னர். இதன் போதே அவர்கள் இலங்கை க்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தி ருக்கின்றனர்.

புத்தகாயவுக்கு தலாய்லாமா சென்றிரு ந்த போது, ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடியிருந்தனர். வழக்கத்துக்கு மாறான பக்தர்கள் அங்கு திரண்டிரு ந்தமை இலங்கை பௌத்த பிக்குகளு க்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக் கிறது.

தலாய்லாமாவின் பேச்சைக் கேட்பதற் காக குவிந்த மக்கள், இலங்கைக்கு வந்தால் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடையும், நாடு எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடி ஓரளவுக்குத் தீரும் என்பது, பௌத்த பிக்குகளின் கணிப்பு. அவர்கள் மதத்தை தாண்டி மதத்தலைவர் ஒருவரின் பயணத்தை பொருளாதாரத்துடன் பொருத்திப் பார்க்க முயன்றுள்ளனர்.

ஆனால் இந்தியாவின் தர்மசாலாவில் உள்ள தலாய்லாமா அருகில் உள்ள இலங்கைக்குப் பயணம் மேற் கொள் வது ஒன்றும் இலகுவான காரியமாக இருக்காது.

இலங்கையில் பௌத்த பீடங்களே அரசியலை, ஆட்சியைத் தீர்மானிப்ப தாக கூறப்பட்டாலும், பௌத்த மத தலைவரான தலாய்லாமாவை அவர் களால் அழைத்து வர முடியவில்லை. ரோஹிங்கியா மக்களின் இனப்படு கொலைக்கு காரணமானவர் என்று குற்றம் சாட்டப்படும் மியான்மாரின் விராது பிக்குவினால் இலங்கைக்கு வர முடிந்தாலும், திபெத்தின் ஆன்மீகத் தலைவரான தலாய்லாமாவினால் இலங்கைக்கு வர முடியாதுள்ளது.

இலங்கை புத்தபெருமான் வருகை தந்த புனித பூமி என்று பௌத்தர்களால் நம்பப்படுகின்ற போதும், பௌத்த மத தலைவரான அவரால் இலங்கையில் உள்ள பௌத்த வழிபாட்டு இடங் களை தரிசிக்க முடியவில்லை. இங்கு மதம், மற்றும் அரசியலைத் தாண்டி ஆதிக்கம் செலுத்துவது புவிசார் அரசியல் தான். திபெத் மக்களின் ஆன் மீகத் தலைவராக இருப்பவர் தலாய் லாமா. அவர் திபெத் மக்களின் சுதந்திரத்தை வலியுறுத்துகிறார்.

ஆனால் திபெத்தை கைப்பற்றி தனது சுயாட்சிப் பிரதேசமாக அறிவித்திருக் கிறது சீனா. இதன் பின்னரே, திபெத் மக்களால் கடவுளின் அவதாரமாக போற்றப்படுகின்ற 14ஆவது தலாய் லாமா, 1959ஆம் ஆண்டு திபெத்தில் இருந்து வெளியேறி இந்தியாவில் அடைக்கலம் தேடினார்.

அவருக்கு தர்மசாலாவில் இடமளித்து, நிழல் அரசு ஒன்றை நடத்துவதற்கு இந்தியா அங்கீகாரமும் அளித்திருக் கிறது. இந்தியாவும் சீனாவும் மோதிக் கொள்வதற்கு தலாய்லாமாவுக்கு அடைக்கலம் கொடுத்து வைத்திருப் பதும், திபெத் விவகாரத்தில் இந்தியா வின் கொள்கையும் ஒரு காரணம்

தலாய்லாமாவை இந்தியாவுக்குள் முடக்குவதற்கு சீனா தனது உச்ச பட்ச இராஜதந்திர அணுகுமுறைகளை கையாளுகிறது. திபெத் அல்லது, தாய் வான் பிரிவினையை ஆதரிக்காத, 'ஒரே சீனா' என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள உலக நாடுகளை சீனா வலி யுறுத்துகிறது. அதற்காக தன்னிடம் உள்ள பொருளாதார அல்லது வேறு பல சக்திகளைப் பயன்படுத்திக் கொள் கிறது. இலங்கை சீனாவுடன் கொண்டி ருக்கும் பாரம்பரிய நட்புறவின் காரண மாக, திபெத் அல்லது தாய்வானை அங்கீகரிக்க தயங்குகிறது.

திபெத் ஒரு பௌத்த புனித பிரதேச மாக இருந்தாலும், தலாய்லாமா ஒரு பௌத்த ஆன்மீக தலைவராக இருந் தாலும், இலங்கை அவருடன் நெரு க்கமாக இருப்பதை தவிர்த்து வரு



கிறது. அதற்கு முழுக் காரணம் சீனா வுடன் கொண்டிருக்கும் உறவு தான்.

தலாய்லாமாவுக்கு இலங்கை வருமாறு பௌத்த பிக்குகள் அழைப்பு விடுப்பது இதுதான் முதல் முறையல்ல. அவரை 2015ஆம் ஆண்டிலும் பௌத்த பிக்கு கள் இலங்கைக்கு அழைத்திருந்தனர். ஆனால் மைத்திரி அரசாங்கம் அவரு க்கு விசா வழங்குவதற்கு தயாராக இருக்கவில்லை. அதனால் அவர் அப் போது அந்தப் பயணத்தை மேற் கொள்ள முடியாமல் போனது. இப் போது மீண்டும் அவருக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தாலும் அவர் அதனை ஏற்றுக் கொண்டு இலங்கை வருவது அரசாங்கத்தின் கையிலேயே இருக்கிறது.

தலாய்லாமா ஒரு ஆன்மீகத் தலை வராக இருந்தாலும், அவருக்கு அரசா ங்கம் அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறு இல்லா விட்டாலும், அவருக்கான வசதிகளை செய்து கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

ஏனென்றால் அவர் திபெத்தின் ஆன் மீகத் தலைவராக போற்றப்படுபவர். அவருக்கு அச்சுறுத்தல்களும் அதிகம். அண்மையில் புத்தகாயவுக்கு அவர் சென்றிருந்த போது அவரை பின் தொடர்ந்து தகவல்களைத் திரட்டிய சீன பெண் உளவாளி ஒருவர் இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாடு கடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

தலாய்லாமா உயிருடன் இருக்கும் வரை தான் திபெத்தின் சுதந்திரக் கோரிக்கை உயிர்ப்புடன் இருக்கும் என்று சீனா நம்புகிறது. அதனால் தான், அடுத்த தலாய்லா மாவாக இரண் டாவது நிலை தலைவராக கருதப் படும் பஞ்சன்லாமாவை சீனா கடத்திக் கொண்டு போனது.

தற்போதைய 11ஆவது பஞ்சன் லாமா, கெதுன் சோய்கி நைமா. அவர், தலாய் லாமாவினால் 1995 ஆம் ஆண்டு மே மாதம் அங்கீகரிக்கப்பட்டார். அவர் அங்கீகரிக்கப்பட்டு மூன்று நாட்களு க்குப் பின்னர், ஆறு வயதான பஞ்சன் லாமா, சீன அரசாங்கத்தால் கடத்தப் பட்டார்.அவரது குடும்பத்தினர் தடுப்பு க்காவலில் வைக்கப்பட்டனர்.

பஞ்சன்லாமா கெதுன் சோக்கி நைமா 1995 முதல் பொதுவெளியில் காணப் படவில்லை. அவர் என்னவானார் என்றும் தெரியாது. அவருக்குப் பதி லாக சீன அரசாங்கம் 11ஆவது பஞ்சன்லாமாவாக கியான்கெய்ன் நோர் புவை அறிவித்தது. அந்த நியமன த்தை திபெத் மக்களோ, வெளிநாடு களில் உள்ள பௌத்தர்களோ அங்கீக ரிக்க வில்லை. இவ்வாறானதொரு சூழலில் தலாய் லாமாவை, இலங்கை அழைத்து வந்து, உரிய மரியாதை களை வழங்குவதை சீனா வெறுப்பு டன் தான் பார்க்கும். தனது இறை யாண்மைக்குட்பட்ட பகுதியாக திபெத், தாய்வான் போன்றவற்றுக்கு உரிமை கோரும் சீனா, தலாய் லாமா விடயத்தில் எல்லா நாடுகளுடனும் முரண்பட்டு வந்திருக்கிறது.

இலங்கைக்கு அவர் அழைக்கப் பட் டால், அது இருதரப்பு உறவுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையில் இப்போது பெரியளவில் முதலீடுகளை செய்திருப்பது சீனா தான். சீனாவின் முதலீடுகள், கடன், மற்றும் பொருளாதார உதவிகளை இழப்பது இலங்கைக்கு பேராபத்தாக இருக்கும். அதைவிட தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதி யத்தின் உதவியும் அதன் மூலம் கிடைக்கும் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய நாடு என்ற அங்கீகா ரமும் இலங்கைக்கு முக்கியம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி யைப் பெறுவதற்கு சீனாவின் கடன் மறுசீரமைப்பு இணக்கப்பாடு அவ சியம், அந்த இணக்கப்பாட்டுக்கு வரு வதில் இழுபறிப்பட்டுக் கொண்டிரு க்கிறது.

சீனா இவ்வாறான நிலையில், தலாய் லாமாவை அழைத்து வந்து சீனா வுடன் மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் விரும்பாது. அதனை எப்படியும் தடுக் கவே முயற்சிக்கும். இலங்கை ஒரு பௌத்த நாடு என்று பெருமையுடன் கூறிக் கொண்டாலும், உலகப் பௌத் தர்களால் ஆன்மீகத் தலைவராக கொண்டாடப்படும் ஒருவர் இங்கு வரவும் முடியவில்லை. அவரை அழை த்து வரவும் முடியவில்லை. இது தான் இலங்கையின் இறைமையின் நிலை. சீனாவின் இறைமையை காப் பாற்றிக் கொள்வதற்காக இலங்கையின் இறைமை கைவிட்டுப் போயிருக் கிறது என்பது தான் உண்மை.

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை


சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப பலன்கள் உண்டாகும். எடுத்த காரியத்தில் இருந்து வந்த தாமதம் நீங்கி வேகம் எடுக்கும். எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங் கள் வேகம் பெறும். புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறை வேற்ற பாடுபட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதி காரிகளை அனுசரித்து செல்வது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும்.



ரிஷபராசி அன்பர்களே! முன்னே ற்றத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும். தொழில் விருத்தியடையும். உத்தியோ கத்தில் இருப்பவர்கள் மேன்மை அடை வார்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சக பணியாளர்களின் ஒத்து ழைப்பும் இருக்கும். குடும்பத்தில் திருப்தி கரமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக் கும். குடும்ப விஷயங்களை மூன்றாவது நப ரிடம் பேசாமல் இருப்பது நன்மை தரும்.




மிதுனராசி அன்பர்களே! உடல் ஆரோக்கியம் பெறும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பங்குதாரர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது சிறந்தது. உத்யோகத்தில் இருப்பவர்களின் பொறுப்புகள் அதிகரிக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கண வன், மனைவிக்குள் இருந்து வந்த மனக் கசப்புகள் விலகி ஓரளவு நல்ல ஒற்றுமை யுடன் வாழ நேரிடும்.




கடகராசி அன்பர்களே! அனுகூல மான பலன்கள் உண்டாகும். காரியங்களில் தொய்வு ஏற்பட்டா லும் முடிவில் நன்மை நடக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். அரசாங்க ரீதியிலான அனுகூலம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணிகளை தாம தம் இல்லாமல் முடிக்க பாடுபடுவார்கள். குழந்தைகளால் மனசஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வாகனங் களில் செல்லும் போது கவனம் தேவை. இறை வழிபாடு நன்மை தரும்.




சிம்மராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டா கும். உடல் ஆரோக்யம் உண் டாகும். சுப நிகழ்ச்சிகளில் கல ந்து கொள்வீர்கள். பணவரவும் இருப்ப துடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த இழுபறி நிலை மாறும். வீண் பேச்சுக்களை குறைத்துக் கொள் வது நல்லது. உத்தியோகத்தில் இருப்ப வர்கள் பணிகள் சாதகமாக நடக்கும்.



கன்னிராசி அன்பர்களே! தொழில் வியாபாரத்திற்காக எதிர்பார்த்த வர்களுக்கு நினைத்த இடத்தில் கடன் கிடைக்கும். உத்தியோ கத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச் சலும் .வேலை பளுவால் மனசலிப்பும் உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கண வன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் மாறி சகஜ நிலை ஏற்படும். குழந்தைகள் மகிழ்ச்சி அடைவர்.



துலாம்ராசி அன்கபர்களே! எந்த விஷயத்திலும் உடனடி தீர்வு காண முடியாத இழுபறி நிலை காணப்படும். புதிய நட்புகள் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயல்படுத்த முடிவெடுப் பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். பணி நிமித்தமாக அலைய வேண்டியதிருக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு கூடும். பிள் ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். வீட்டி ற்கு பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




விருச்சிகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக நடந்து முடி யாமல் இருந்த ஒரு வேலை நடக்கும். தைரியம் அதிகரிக்கும். தந்தையின் உடல்நிலையில் கவனமாக இரு ப்பது நல்லது. தொழிலில் லாபம் வழக்கம் போல் இருக்கும். ஆர்டர்கள் பெறுவதில் தாமதம் ஏற்பட்டு நீங்கும். உத்தியோகஸ்தர் கள் கவனமாக பணி செய்வது நல்லது. குடும்பத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.







தனுசுராசி அன்பர்களே! எதிர்ப்பு கள் நீங்கும். விருந்து நிகழ்ச்சி களில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்களில் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலைகளில் கவனமாக இருப்பது நல் லது. குடும்பத்தில் உறவினருடன் கரு த்து வேறுபாடு உண்டாகலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பார்த்து கொள்வது நல்லது. சொத்து விவகாரங் களில் கவனம் தேவை.



மகரராசி அன்பர்களே! காரிய தடைகள் நீங்கும். திட்ட மிட்டபடி எல்லாம் நடக்கும். கடன் தொல்லை குறையும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். சொத்து சம்பந்த மான விஷயங்கள் இருந்து வந்த தடை கள் அகலும். உறவினர்கள் நண்பர்கள் மூலம் தேவையான உதவிகள் கிடைக் கும். தொழில் வியாபாரம் எந்த ஒரு பிரச்ச னையும் இன்றி நல்லபடியாக நடை பெறும்.



கும்பராசி அன்பர்களே! காரிய அனுகூலம் உண்டாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். கொடு த்த வாக்கைக் காப்பாற்றி நன் மதிப்பு பெறுவீர்கள். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். வேலை தேடு பவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை கிடைக்கும். உத்யோகத்தில் இருப் பவர்கள் கட்டளை இடும் பதவிகள் கிடை க்க பெறுவார்கள். கணவன், மனைவிக் கிடையே சுமூக உறவு இருக்கும்..



மீனராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டா கும். உடல் ஆரோக்யம் உண் டாகும். சுப நிகழ்ச்சிகளில் கல ந்து கொள்வீர்கள். பணவரவும் இருப்ப துடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த இழுபறி நிலை மாறும். வீண் பேச்சுக்களை குறைத்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகள் சாதக மாக நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# உள்ளூராட்சித் தேர்தலில் மணியுடன் இணைந்து போட்டியிட விக்கி தீர்மானம்!

(6ம் பக்கத் தொடர்ச்சி) அந்த வகையில், சந்திப்பை தொடர்ந்து, ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. அதில், உள்ளுராட்சி சபைத் தேர்தலில், வி.மணிவண்ணன் அணியுடன் இணைந்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். ஊடக சந்திப்பில், வி.மணிவண்ணன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இது இவ்வாறிருக்க தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனுக்கும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு அன்று இரவு, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

பிற்பகல் 6.00 மணிக்கு, யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில், இந்த சந்திப்பு இடம் பெற்றது. இதில், பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது.

# சீனாவை ஈழத்தமிழர்கள் அணுகுவது அவசியமானதா?

(20ம் பக்கத் தொடர்ச்சி) நாடாக உள்ளது. இத்தகைய வலிமையுடைய நாடான சீனாவின் மடியிலேயே தென்னிலங்கை ஆட்சியும் அதிகாரமும் உட்காந்திருக்கிறது. தென்னிலங்கை பலமான தளத்தில் உள்ளது என்பதோடு, சீனாவும் அதனை நோக்கியே அரசுக்கும் அரசுகளுக்குமான உறவைப் பற்றியே முதன்மைப்படுத்துகிறது. அதனால் ஈழத்தமிழரும் அவர்களது அரசியலும் வெளியுறவும் இந்தியாவுடனும் மேற்குடனும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதனால் ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற விவாதம் இல்லாமலில்லை.

ஏனெனில் ஒரு தேசிய இனத்தின் இருப்பானது, சர்வதேச அரசியலில் தங்கியுள்ளது. ஈழத்தமிழரது அரசியல் புவிசார், அரசியல் சக்தியான இந்தியா விடமே அதிகம் தங்கியுள்ளது. இந்தியாவின் பலத்திலும் அதன் கூட்டுக்களின் வலுவிலுமே சார்ந்துள்ளது. இதனை இலங்கைக்கான சீனாவின் தூதரகங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். சீனாவின் வெளியுறவுக் கொள்கை எவ்வாறு அரசுக்கும் அரசுக்குமான உறவை முதன்மைப்படுத்துகிறதோ அவ்வாறே ஈழத்தமிழருக்கும் அவர்களது வெளியுறவுக்குமான தனித்துவம் உண்டு. இவற்றை எல்லாம் கடந்து ஈழத்தமிழர் செயல்பட வேண்டுமாயின் சீனாவின் நகர்வு ஈழத்தமிழரை நோக்கியதாக அமைதல் வேண்டும்.

எனவே இந்தியா சீனாவை மோதனிடுவதல்ல ஈழத்தமிழரது அரசியலின் இலக்கு. மாறாக இரு நாட்டையும் முகாமை செய்துகொண்டு எப்படி நிலத்தையும் மக்களையும் வளங்களையும் அவர்களது அடிப்படைகளையும் பாதுகாப்பதென்பதிலேயே அரசியல் தங்கியுள்ளது. இதற்கு சீனா ஈழத்தமிழரை நோக்கி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அதில் தெளிவான முடிவுகளை எடுப்பதோடு, அதற்கான சமிக்ஞைகளை காட்டுதல் வேண்டும். வெறும் நிவாரண அரசியலை மேற்கொள்வது தமிழர் அரசியலுக்கு தீர்வாகாது. தமிழரது நீண்ட போராட்டமும் அதன் விளைவுகளும் எந்தவகையான அரசியல் மாற்றத்தையும் தமிழருக்கு சாதகமாக ஏற்படுத்தவில்லை. மாறாக அதனை முதன்மைப் படுத்திக் கொண்ட ஏனைய தரப்புகள் அதிக நலன்களையும் அரசியல் பயன்களையும் அடைந்துள்ளனர். அதனைத்தான் சீனா மேற்கொள்ள முயல்கிறதா அல்லது சாதகமாக தமிழரது அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்கப் போகிறதா என்பது அவசியமானதாகும்.

# கோட்டா - மகிந்தா சகோதரர்கள் உட்பட 4 பேர் கனடாவுக்குள் நுழையத் தடை!

(3ம் பக்கத் தொடர்ச்சி) வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி அறிவித்துள்ளார். ஈஜபக்ச சகோதரர்களுக்கு மேலதிகமாக, இன்று விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளில் இலங்கை இராணுவப் பணியாளர் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் கடற்படை உளவுத்துறை அதிகாரி லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடங்குவர்.

இந்த நான்கு இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக கனடா அரசாங்கம் விதித்துள்ள தடைகள், இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அடுத்த படியாகும். இதுவரை, இரண்டு ராஜபக்சே சகோதரர்களும் தீவில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பல போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு எந்தப் பொறுப்பும் சொல்லாமல் இருந்து வருகின்றனர்.

கனடா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள், சர்வதேச மனித உரிமைச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்படுவார்கள் என்பதற்கான தெளிவான அறிகுறியாகும், அவர்கள் நீதியைத் தவிர்க்க முடியாது.

பொறுப்புக் கூறலை நோக்கிய பயணம் நீண்டது மற்றும் வேதனையானது என்றாலும், நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்வதற்காக உயிர் பிழைத்தவர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் நான் தொடர்ந்து அணிவகுத்து வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் தனி வழி செல்லும் தமிழரசுக்கட்சி!

(7ம் பக்கத் தொடர்ச்சி) ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சி அதில் அங்கம் வகிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியே அதில் இடம்பெற்றி ருந்தது.

பின்னர் 2004ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வழிகாட்டலுக்கு அமையவே இலங்கை தமிழரசுக் கட்சி கூட்டமை ப்பின் ஒரு பங்காளிக் கட்சியாக உள்வாங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து அதில் அங்கம் வகித்து வரும் ஒரே கட்சி ரெலோ என்பதும் குறிப்பிடத்தக்கது

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600







